நூ: 14301

# தமிழருவி

## தமிழ் விழா சிறப்புமலர்

## 1990



ளை தமிழ் மகாவித்தியாலயம்

பண்டாரவளை

2. 06
பண்டா
SL/PR

தமிழ் விழா இனிதே சிறப்புற எம் நல்வாழ்த்துக்கள்

கலவயை அழிக்கவே முடியாது. தீ அதை சுடாது. தண்ணீரில் அது கரையாது, காற்றினாலோ, கள்வராலோ அசைக்கவும் முடியாது.

— கீதை

# மஹாவலி டிரேடிங் கம்பெனி

139, பிரதான வீதி

பண்டாரவளை

தொலைபேசி : 057 - 2105

## தமிழ் மகா வித்தியாலயம்
## பண்டாரவளை

# தமிழருவி

## 1990

## வித்தியாலயத்தின் தமிழ்விழா
## சிறப்பிதழ்

## சமர்ப்பணம்

ஆழி சூழ் உலகினில் அழகு தமிழ் க்ல்விதனை அரியணை ஏற்றிட-
அருந் தொண்டாற்றிய ஆசிரியச் செம்மல்க்ளின்
அயராத பணிதனை மனமுன் நிறுத்திட -இம்
மலரை சமர்ப்பணமாக்குகிறோம்

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே !

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழிய வே !

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழிய வே !

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே !

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே !

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே !

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே !

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழிய வே !

ஓம்

*Ramakrishna Mission*
*(Ceylon Branch)*
*49, Ramakrishna Road,*
*Colombo-6.*

# ஆசிச் செய்தி

பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயம் தமிழுக்கு விழா எடுப்பதையும், தமிழருவி சஞ்சிகையினை வெளியிடுவதனையும் அறிந்து மிக்வும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வாறான விழாக்கள் மாணவர்கள் மத்தியிலே மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணரவும் மக்கள் மத்தியிலே மொழிப்பற்றை ஏற்படுத்தவும் உதவும் என்பதில் சந்தேகமில்லை

இவ்வித்தியாலயம் இன்னும் பல தமிழ் விழாக்க்ளைக்கண்டும். சஞ்சிகைகளை வெளியிட்டும் தமிழுக்கும் சமயத்துக்கும் பெரும் தொண்டாற்ற வேண்டும் என வாழ்த்தி, விழா சிறப்படைய கலைத்தேவி கலைவாணியை இறைஞ்சுகின்றேன்.

சுவாமி சம்பிரஞானந்தா

*
*
*

Bishop's House
Badulla.

# ஆசிச் செய்தி

பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயம் நடத்தவிருக்கும் தமிழ் விழா நினைவாக வெளியிடவிருக்கும் 'தமிழருவி' மலருக்கு என் வாழ்த்துக்களை அனுப்புவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வி அறிவையும், கேள்வி அறிவையும் அனுபவ அறிவாக ஏற்றுக்கொள் பவனே விரைவில் அறிவாளியாகிறான். அதேபோல் நெஞ்சத்தில் நேர்மையுட னும், நீதியில் உயர்வுடனும், உண்மையில் பற்றுடனும், ஒழுக்கத்தில் நாட்ட முடனும்; கடமையில் கண்ணியத்துடனும் வாழ முயல்பவனே பெரும் மேதை யாகிறான்.

நீங்கள் எடுக்கும் விழா மாணவ உள்ளங்களுக்கு உயிர்ப்புக் கொடுத்து அவர்களின் தனியாற்றல்களை தட்டிக் கொடுக்கும் தகுதியுடையதாய் அமை வதாக, உங்கள் கல்விக்கூடம் அறிவாளிகளையும், மேதைகளையும், நாட்டைக் காக்கும், நற் பிரஜைகளையும் உருவாக்கும் வித்தியாலயமாக அமைய, இறை ஆசீர் வேண்டி என்னாசி கூறி நிற்கின்றேன்.

அதிவண எட்வர்ட் பெர்னாண்டோ
பேராயர் பதுளை

Grand Mospue
151, New Moor Street,
Colombo-12.

# ஆசிச் செய்தி

நான் இந்த நற்செய்தியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி அறிவு எமது சிறார்களுக்கு மிக மிக அவசியமான ஒன்று. ஏனென்றால் கல்வியை விடமிக சிறந்தது மேலானது மதிப்பிற்குரியது. உலகில் வேறொன்றுமில்லை. கல்வி நீராலோ நெருப்பாலோ பூகம்பத்தினாலோ திருடனினாலோ அழிக்க ஒழிக்க இல்லாமல் செய்ய இயலாத ஒன்றாகும். ஒரு அரசனுக்கு அவனது நாட்டிலேதான், சிறப்பு கல்வி கற்றவர்களுக்கோ அவர்கள் சென்ற இடமெல்லாம் சிறப்பும் கண்ணியமும் மேன்மையும் கிடைக்கும் எனவே ஒவ்வொரு மாணவரும் மாணவப் பருவத்திலே, படிக்கும் காலத்திலே கண்ணுங் கருத்துமாய் படித்து முன்னேற முயற்சி செய்து கொள்ளவேண்டும் கல்வியை இளமை தொடக்கம் கற்றல் வேண்டும். இளமையின் கல்வி உள்ளத்திலே நன்கு பதியும். கல்லிலே எழுதப்பட்ட எழுத்துப்போல அழியாது இருக்கும் இவ்வாறு நாம் கல்வி கற்றால் தான் பிற் காலத்திலே நல்வாழ்வு வாழலாம். ஆசிரியராக் அல்லது மருத்துவராக பொறியிலாளராக வழக்கறிஞராக விற்பன்னராக இருந்து தொழில் புரிந்து நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் இனத்தவருக்கும் சேவை செய்து. புகழோடு இன்பமாக வாழலாம். அதனால் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்து இப்பாடசாலையை முன்னேறச் செய்து நற் பிரஜைகள் உருவாகக் கூடிய பாடசாலையாக ஆக்கவேண்டும்.

அஸ்ஸலாமு அலைக்கும்

**மவ்லவி எம் ஐ எழ் ரஷீத் (பாஹிஜி)**
**பேஷ் இமாம்**

ஊவா மாகாணசபை செயலகம்.
பதுளை.

# ஆசிச் செய்தி

இலங்கை மணித்திருநாட்டில் பேசப்படும் இரண்டு தேசிய மொழிகளான சிங்களமும் தமிழும் நாட்டின் இரண்டு கண்கள் போன்றவை.

எமது ஊவா மகாணத்தின் தலை சிறந்த தமிழ் மொழி மூலப்பாடசாலைகளுள் பண்டாரவளைத் தமிழ் மகா வித்தியாலயமும் ஒன்றாகும் தாய்மொழியின் முக்கியத்துவம் உணரப்படும் இக்காலகட்டத்தில் இவ்வித்தியாலயம் தமிழுக்கு விழாவெடுப்பது சாலச் சிறந்தது. இவற்றை யெல்லாம் கருத்திற்கொண்டு எமது அரசும் தமிழ கற்கும் மாணவர்களுக்கு சிங்களமும் சிங்களம் கற்கும் மாணவர்களுக்கு தமிழும் கற்பிக்க வசதி செய்துள்ளது.

இனங்களுக்கிடையிலான ஒற்றுமையும் புரிந்துணர்வும் அதிகரிக்க வழியேற்படும் என்பதிலே எவ்வித ஐயமுமில்லை. இவ்விழாவில் வெளியிடப்படும் "தமிழருவி" போல பல அருவிகள் வெளிவரவும் தமிழ் விழா இனிதே சிறப்புறவும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**பேர்ஸி சமரவீர**
முதலமைச்சர் ஊவா மாகாணம்

★
★
★

புடவை, கிராமிய தொழிற்றுறை
அபிவிருத்தி அமைச்சு

# ஆசிச் செய்தி

பண்டாரவளை தமிழ் மகாவித்தியாலயத்தில் நடத்தவிருக்கும் தமிழ் விழாவை முன்னிட்டு 'தமிழருவி'' என்ற சிறப்பு மலரை வெளியிடுவது சாலப் பொருத்தமாகும்.

செந்தமிழும், சிங்களமும் இந்நாட்டின் அரச கரும மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்திலே தமிழ் மக்கள் விழிப்புடன் இருந்து தமிழ் மொழி வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாயிருப்பது அவசியம்.

'தமிழருவி' சிறந்த கட்டுரைகளுடன் வெளிவந்து மலையக மாணவர்களுக்கு உதவுமாக

இந்த நல்ல முயற்சிக்கு என் ஆசி

**சௌ. தொண்டமான்**
புடவை, கிராமிய தொழிற்றுறை
அபிவிருத்தி அமைச்சர்

இந்து கலாசார தமிழ் அலுவல்கள்
இராஜாங்க அமைச்சு

# ஆசிச் செய்தி

பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயத்தின் தமிழ் விழாவினை ஒட்டி 'தமிழருவி' என்னும் சஞ்சிகை வெளியிடப்படுவது கண்டு பெரு மகிழ் வெய்துகின்றேன்.

நாடளாவிய ரீதியில், பாடசாலைகளிலே தமிழ்த்தினவிழாக்கள் கொண்டாடப்படும் இத்தருணத்தில், இச்சஞ்சிகை வெளிவருவது சாலப்பொருத்த மானதாகும்.

இத்தகைய சஞ்சிகைகள், மாணவர்களின், கலை, இலக்கிய ஆர்வங் களுக்கு வடிகாலாக அமைவன இவற்றிலே பங்களிப்பு செய்வதன்மூலம் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ளும் அரிய சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைக்கின்றது.

இன்றைய மலையகம், எமது இளைய சமுதாயத்தின் கல்வித்திறமை களையே நம்பி இருக்கின்றது. ஒவ்வொரு மாணவரும் கல்வியால் பல்வேறு விதமான ஆற்றல்களை உருவாக்கிக்கொள்ளவேண்டும். சுயமான சிந்தனை யோடும், தீர்க்கமான செயற்பாடுகளோடும், தாம் சார்ந்த சமுதாய மேம் பாட்டிற்காக அவர்கள் பாடுபடவேண்டும்.

இந்த எண்ணக்கரு பாடசாலை மட்டத்திலே தொடங்குவது நல்லது ஏனெனில் பாடசாலையை இலக்காகக் கொண்டே மிகப்பெரும் காரியங் களை நாம் சாதிக்க முடியும்.

சரியான பாதையிலே நெறிப்படுத்தப்பட்ட மாணவ சமுதாயம் நாளை யப் பொழுதை நம்பிக்கையோடு எதிர்கொள்ளும்,

இந்த நல்ல செய்தியைச் சுமந்துவருகின்ற தமிழருவி செழித்துச் சிறக்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்

இத்தகையவொரு நன்முயற்சியை மேற்கொண்ட, இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்குழாம் மாணவமணிகள் அனைவரையும் மனமாரப் பாராட்டுகின்றேன்.

பி பி தேவராஜ்
பா. உறுப்பினர், இந்துசமய, கலாசார,
தமிழ், அலுவல்கள், இராஜாங்க அமைச்சர்.

ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
பண்டாரவளை.

# ஆசிச் செய்தி

பண்டாரவலை தமிழ் மகாவித்தியாலயம் இப்பகுதியிலேயே மிக முக்கியத்துவமும் புகழும் வாய்ந்த வரலாற்றைக்கொண்டதொரு கல்வி நிலையமாகும். இங்கு தமிழ் மாணவர்களின் கல்வியினை முன்னேற்றுவதற்கு எடுக்கும் முயற்சிகள் பாராட்டத் தக்கனவாகும்.

தற்போதைய நிர்வாகத்தின் கீழ் மிகச் சிறந்த முறையில் விடாமுயற்சியுடன் அதிபரும் சக ஆசிரியர்களும் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கவிடயமாகும்.

அங்கு இதன் ஒரு நடவடிக்கையாக வெளியிடப்படும் தமிழருவி" தமிழ் விழாச் சிறப்புப் மலருக்கு மாணவர்களினதும். ஆசிரியர்களினதும் ஆக்கங்கள் பெரிதும் உதவியுள்ளன.

தமிழ் மொழியில் காணப்படும் திருக்குறள் எனும் வாழ்க்கை நெறி நூலையொத்த "சுபாசித்தய" மற்றும் 'லோவெட சங்கராவ போன்ற நூல்கள் சிங்கள மொழியிலும் காணப்படுகின்றன.

தற்பொழுது தமிழ் இலக்கியத்தில் காணப்படும் ஆர்வம் மேலும் மேலும் ஓங்கி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் இதைப்போன்ற பல தமிழருவிகள் வெளிவர எனது வாழ்துத்துக்கள்,

ஜோர்ஜ் த சில்வா
பிரதி கல்விப் பணிப்பாளர்

# ஆசிச் செய்தி

உலகினையும் வாழ்வினையும் செவ்வனே புரிந்துகொள்ளவும், உறுதியுடனும் உவப்புடனும் எதிர்நோக்கவும் இலக்கியமும் ஏனைய கலைகளும் உதவக்கூடியன. இளைஞர் உள்ளங்களில் இலக்கிய ஈடுபாட்டையும் கலை ஆர்வத்தையும் வளர்ப்பது அவர்களின் எதிர்கால வாழ்வு பயனுள்ள வகையில் அமைய உறுதுணையாகும்.

அந்தவகையில், பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயத்தினர் தமிழுக்கு விழா எடுப்பது விதந்து பாராட்டப்படவேண்டியதாகும். சிறுகதை கவிதை கட்டுரை பா ஓதல், பேச்சு, நாடகம் முதலானவற்றில் போட்டிகளை நடாத்தியதுடன், நடனம், நாடகம், கவியரங்கம், கருத்தரங்கம் முதலானவற்றுக்கும் அவர்கள் ஏற்பாடு செய்திருப்பது அவர்களுடைய உயர்ந்த நோக்கினைப் புலப்படுத்துவதாக விளங்குகிறது. செய்யும் கருமங்களைத் திருத்தமாகவும் பின்வருவோருக்கு முன்மாதிரியாகப் பேணும் வகையிலும் செய்யும் ஆர்வத்துக்கு உதாரணமாகத் தமிழருவி மலரினனை வெளியிடுவது வரவேற்கப்படத்தக்க ஒன்றாகும்.

பண்டாரவளைத் தமிழ் மகாவித்தியாலயத்தினரின் சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்க எமது மனமுவந்த வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் சி. தில்லைநாதன்**

தமிழ்த்துறைத் தலைவர்

பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

# அதிபரின் வாழ்த்து

மலர்கள் மனித உளங்க்ளை மலரச் செய்கின்றன இத் தமிழ் மலரோ எமது மாணவ மணிகளின் தனியாற்றக்ல்ளைத் தட்டி எழுப்பவும் உறங்கிக் கிடக்கும் தமிழ் உணர்வுகளுக்கு உயிர் கொடுக்கவும் ஊடகமாகின்றது. சுந்தரத் தமிழின் சுவை பரப்பும் இம் மலரிற்கு ஆசி வழங்குவதில் பெருமைப்படுகிறேன் முத்தமிழ் விளங்க்ச் செய்யும் இம் முயற்சி பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயம் தமிழுலகிற்கு செய்யும் மகத்தான தொண்டாகும். இச்சீரிய பணியில் பங்கேற்ற அனைத்து ஆசிரியரையும் மாணவர்களையும் உதவி புரிந்தோரையும் பாராட்டுகின்றேன்.

தமிழறிவு பெருக்வும் தமிழ்ப்பணி சிறக்க்வும் எமது மகாவித்தியாலயம் இன்னும் பல மலர்களைத் தொடர்ந்து வெளியிடவும் வாழ்தத்கிறேன்.

வி. டி. ஜெபதுரை

# உப அதிபரின் செய்தி

''எழுத்தறிவித்தவன் இறைவனாகும் எண்ணும்
எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்பது தமிழ்

பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலய ஆசிரியர்களும். மாணவர்களும் கூட்டாக சேர்ந்து தம்தாய் மொழியாம் தமிழன்னைக்கு நன்றியுடையவர் களாக தமிழ் விழா ஒன்றினை எடுக்க முன்வந்திருப்பது நல்லதொரு முயற்சியும் பாராட்டுக்குரியதுமாகும்.

நகரத்தின் உச்சியில் அமைந்து கல்வியிலும் கலைசார்ந்த துறைகளிலும் பொலிவுடன் நடைபோடும் இவ்வித்தியாலயம் பல்துறை பயின்ற கல்விச் செருக் கற்ற கருத்துடை நல்லாசான் களையும் கனிவான, பணிவான அவர்தம் மாணவ மணிகளையும் தன்னகத்தே கொண்டிருப்பது பெருமைக்குரியதாகும் அவர்களின் முயற்சியின் பயனாக 'தமிழருவி' என்ற சஞ்சிகை வெளிவருவது மாணவர்களுக் கும் தமிழுலகுக்கும் நல்ல பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்விழாவினை ஒட்டி வெளிவரவிருக்கும் இம்மலருக்கு இச் செய்தியினை அளிப்பதில் மனமகிழ்வடைகிறேன்.

வாழ்க செந்தமிழ் வாழிய நீடூழி

வே. கருணாகரன்

# உங்களோடு ஒரு நிமிடம்

பண்டாரவளைப் பைந்தமிழ் மைந்தரின் ஒரே பற்றுக் கோடாகத் திகழ்வது எமது மகா வித்தியாலயம். ஒரு யுக வரலாற்றை தன்னுள் அடக்கிய இக்கலாசாலை மலையக மக்களின் விடியலுக்கு வித்திடும் தலையாய கலையகம். இதன் கடந்த கால ஏட்டைப் புரட்டின் நாம் காணும் சாதனைகள் போற்றப்படத்தக்கவை. இக் கல்வியகத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டு வேரிட்டு பயிர் வளர்த்தோரைப், பெருமையுடன் நெஞ்சுருக நாம் நினைவு கூறுகின்றோம்.

ஆறாண்டு இடைவெளிக்குப் பின்னர் ஏடொன்று எடுத்து, வார்த்தைகளை வடிக்கும்போது பல்வகை உணர்வுகள் பீறிட்டு எழுகின்றன. நாட்டை ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கும் நம்மவர் நிலை, நமக்குள் நாம் வளர்த்த நல்லதல்லாத சுயநலம் இதனால் ஏற்பட்ட இழப்புகள், காயங்கள் இப்படி பற்பல.

இத்தனைக்கும் மத்தியில் ஆண்டுக்கு ஆண்டு எமது மாணவ மணிகள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்தி கொண்டிருக்கிறார்கள். என்றால் அங்கு எமது மாணவ மணிகளின் ஆற்றல், ஆர்வம் என்பவை வெள்ளிடைமலை

## இது எமது பாடசாலை, எமது கல்விக்கூடம்.

உங்கள் மாணவ சமுதாயத்திற்கு உங்கள் பாடசாலைக்கு உங்களது பங்களிப்பு என்ன விஞ்ஞான மெஞ்ஞான அறிவினை வளர்க்க வேண்டிய எமது அறிவகத்தில் ஆறாப் புண்ணாக் இருப்பது ஆசிரியர் பற்றாக்குறை.

ஆண்டுக்கு ஆண்டு மலையகத்திற்கு நியமனம் பெறும் பட்டதாரிகள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கவே செய்கிறார்கள் ஆனால்......எமக்கோ......இடம் மாறிச் செல்பவர்களின் இடங்கள் கூட இன்றும் வெற்றிடங்களாக உள்ள பரிதாப நிலை''

அந்த வெற்றிடங்களை, மாணவரின் கல்வியில் இல்லாமல் செய்ய ஏனையோர் படும் பாடு.

பெருமையுடன் விழா எடுக்கும் எம் ஒரே தமிழ் மகா வித்தியாலயத்தில் உள்ள தமிழ் ஆசிரியர்களின் தொகை கவலைக்குரியது. ஏன் இந்தப் பாராமுகம் ?

தோளோடு தோள் கொடுத்துதவிவரும் எம் ஆசிரிய சோதரருடன் இணைந்து செயற்பட உங்களது ஒத்துழைப்பு தேவை. எங்கள் பிள்ளைகளிடம் திறமை உள்ளது. அவர்களது அறிவுச் சுரங்கத்தை அகழ்ந்திட, ஆற்றல்களை இனம் கண்டு வார்த்தெடுக்க, ஆவன செய்வதில் உங்களது கடமையை உற்று நோக்குங்கள்.

பழம் பெருமை சொல்லும் எமது கட்டிடங்களே தளபாடக் குறைவால் தடுமாறித் திரியும் தம் மைந்தர் நிலை உரைக்கும். பெயரளவில் ''நூலகம்'' உண்டுதான் அதனை பெறுமதியாக்கும் காலம் எப்போ விடியுமோ? நன்மை விரும்பிகளே நல்ல உள்ளம் படைத்தோர்களே உங்கள் சிறார்கள் பயிலுகின்ற விஞ்ஞான ஆய்வு கூடம், மனையியல் கூடம் ஆகியவற்றைப் புதுப் பொலிவுடன் அமைக்க நீங்கள் முன்வர வேண்டும்.

இயல்பாகவே கலைத்துறையில் ஈடுபாடு கொண்ட எம்மவர், இசையோடு தமிழ்பாட ஏற்ற இசைக் கருவிகள் இல்லையே. தமிழ்தாய் பெற்ற மைந்தர் தன்மானத்துடன் வாழ தந்தையரே! தாய்மாரே! விழித்தெழுவோம்.

எமது பாடசாலை வெறும் கட்டிடமல்ல உள்ளங்கள் அங்கு கட்டுவது உடல்களையல்ல வாழ்க்கையை. கடந்த கசப்பான சம்பவங்களை குழிதோண்டிப் புதைத்துவிட்டு புதுப்பாதை அமைப்போம் வாரீர்! தமிழ்த்தாய்க்கு விழா எடுத்தோம் உங்கள் ஆதரவால், தனையரின் வாழ்வைக் கட்டியெழுப்புவோம் உங்கள் ஒத்துழைப்பால்!

நன்றி

*With Best Compliments from*

# M. M. K. T. & Sons

**No. 27, Main Street,**
**HAPUTALE**

---

With Best Compliments from

# Indra Stores

No, 12,Dambatenne Road,
**Haputale**

---


With Best Compliments of

பாடுபடுவோர்க்கே இந்தப்
பாரிடம் சொந்தமையா— தே. வி.

# PETTAH TEX

Wholesale &Retail Dealers in Textiles
S... C S..per Market, 93/3, Keyzer Street, Colombo-11.

கல்விக் கண் திறக்கும் எம் கல்விக் கூடம்



''பயிற்றிப் பல கல்வி தந்து — இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்''

## THE STAFF - 1990

PRINCIPAL :

Mr. V. T. Jebethurai B. Sc. (Cey)

DEPUTY PRINCIPAL:

Mr. V. Karunakaran B. com. (Cey)

ASST. TEACHERS :

Mr. J. Dissanayaka - Sinh. Td.
Mrs. M. S. M, Marshall - Eng. Td.
Miss. S. Catharin Amma - Tamil Td.
Mrs. K. T. Kamalawathy - Sinh Td.
Mr, P. Mohanasundaram - B. Sc. (Cey)
Mr. M. A. Khan - G.C.E. (A/L)
Mrs. N. M. Ibrahim - Eng. Td.
Mrs. S N. Fasy - H. Sc. Td.
Mrs. H. M. Zarook - Ag. Td
Mrs. D. Sheela Edward - Soc, Td.
Mr. K. Ratnasapathy B Sc. (Cey)
Mrs. S. Suthanthiran - Pri. Td.
Mrs. R. V. A. Majeed - Pri. Td.
Miss. A. Shihana - G.C.E. A/L
Miss. P. Kuganeswary - Pri Td.
Miss. V. K. Jeyashanthi - Pri Td.
Mrs. E. Seerpatham - B. Com. (Hons) (Cey)
Miss. G. Karunanithy - G.C.E. (A/L)
Miss. S. Indrani G C.E. A/L (H. Seince)
Miss. O. S. M. Murugupillai - Eng. Td. & G.A.O. (Eng)
Miss. P. A. Thanapalasingam - Eng. Td.
Miss. S. Paramanathan - G.C.E A/L. Primary
Mrs. Haseenah Jamaldeen- G.C.E. A/L Eng.
Miss. T. Tharmasanthini - G.C.E. (A/L)
Miss N. Naguleswary - B.Sc. (Cey)
Mr, S. Thiyaganathan - B. Sc. (Cey)
Mrs. S. Shanmuganathan B. Sc. (Cey)
Rev. Sr. S. Elizabeth A. C. B.A. (Cey)
Rev. Sr. Mary Adelina A.C. Eng. Td
Miss. S. Thaneswary - G.C.E. A/L.
Miss. P. Rajananthini Dip. in Dance
Mrs. P. Helan Sahaiyam - Teacher Trainee
Miss. Selvarani - Teacher Trainee
Mrs. C. Gnanapiragasam Maths Td.
Miss. T. Mary Thanamany Teacher Trainee
Miss. S. N. Shanthy - Teacher Trainee

HONORARY TEACHERS:

Miss. R. Devika (Music)
Miss. R. Puwaneswary
Miss. N. Agiela
Miss. M. Krishnaverni
Miss. T. Thilagamani

## எழுத்தறிவிக்கும் எமதாசிரியக் குடும்பம்



''தான் இன் புறுவதுல்கின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்''

தமிழாரம் சூட்டும் தனயர்



,,இறவாத புகழுடைய தமிழ் நூல்கள்
குறையாமல் நம்மிடையே தோன்ற வேண்டும்."

''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்''

திரு. வி. டி. ஜெபத்துரை
திரு. வி. கருணாகரன்
திரு. பி. மோகன சுந்தரம்
திருமதி, எம். ஆர். எஸ். மார்ஷல்


திரு. எம். ஏ. கான்
அருட்செல்வி அடலினா அ.கா.
திருமதி. எஸ். சுதந்திரன்
திரு, சி. தியாக்நாதன்

செல்வன் ஆர். கார்த்திகேயன் சிரேஷ்ட மாணவ தலைவர்
செல்வி எம். சுதர்ஷனி சிரேஷ்ட மாணவ தலைவி

செல்வன் எஸ். ரவிந்திரநாத்
,, எஸ். மனோஜ்குமார்
,, பி. லோகநாதன்
,, பி. ராஜசேக்ரன்
,, கே. செல்வராஜ்
,, டி. சந்திரசேகர்
,, பி. நித்யானந்தன்
,, எஸ். புண்ணியராஜ்
,, எஸ். ரவிந்திரன்
,, எஸ். ராஜயோகம்
,, எஸ் சுதந்திரன்
,, எஸ். சாம்சன்

செல்வி எஸ். ராஜமணி
,, எம். பத்மா
,, ஏ. வளர்மொழி
,, சி. மினாம்பிகா
,, என். ஜெகயாழினி
,, ஏ. பவுமியா
,, எஸ். கிருஷ்ணவேணி
,, டி. யோகலஷ்மி
,, ஏ. பாரிசா
,, எஸ். லக்ஷ்மி
,, கே. பராசக்தி

நன்னடத்தை காக்கும் நம்மவர்



பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும்ஃதே துணை.

**எம். எஸ். மூக்கையா**
B. A. (Hons) M. A. Msc. (Wales) MITP
சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# தோட்டத் தொழிலாளர்களின் சுபீட்சமும் உயர் கல்வியும்

இலங்கையில் 1989 ஆம் ஆண்டின் இறுதியில் சுமார் 11 இலட்சம் இந்திய வம்சாவழித் தமிழர்கள் வாழ்ந்ததாக கணிப்பீடுகள் கூறுகின்றன. இவர்களில் சுமார் 50,000 பேரைத் தவிர்த்து ஏனையோர் பெரும்பாலும் தேயிலை, இறபர் தோட்டங்களிலும், ஏனையோர் வவுனியாவை உள்ளடக்கிய வடமாகாணப் பிரதேசங்களின் கிராமப் புறங்களிலும், ஒரு சிறியளவில் கிழக்குமாகாண கிராமங்களிலும் வாழ்ந்தனர். முன்னர் குறிப்பிட்ட 50000 பேர் பெரும்பாலும் கொழும்பு, கண்டி நாவலப்பிட்டி, அட்டன், பதுளை போன்ற நகரங்களிலும் வேறு சில பிரதேசங்களின் கிராமங்களிலும் வாழ்ந்தனர், நகரங்களில் வாழ்பவர்களில் சுமார் 25,000 பேரைத் தவிர்த்த ஏனையோரும் தோட்டங்களிலும் கிராமங்களிலும் வாழ்பவர்களையும் உள்ளடக்கிய 10 இலட்சத்து 75 ஆயிரம் பேர்களின் வாழ்க்கை நிலைமைகளை, நுணுக்கமாக கவனித்தால் அவர்கள் அனைவருமே ஏற்றுக்கொள்ள கூடியதான குறைந்தபட்ச வாழ்க்கை தரத்திற்கும் கீழான வாழ்க்கையினையே வாழ்ந்து வருகின்றனர் என நாம் தீர்மானிக்காலம்.

வாழ்க்கைத் தரம் என்பது ஒருவர் எந்தளவிற்கு தனது அடிப்படை தேவைகளான உணவு உடை, வீடு, சுகாதார வசதி, கல்வி, போக்கு வரத்து வசதிகளை பெற்றிருக்கின்றார் என்பதனை விளக்கும் கோட்பாடாகும். இந்த அடிப்படை வசதிகளை பெற்றுக் கொள்ள ஒருவருக்கு ஏற்ற இலாபரமான தொழில் வாய்ப்பும் தேவை என்பதனை யாவரும் அறிவோம். எனவே மேற்கூறிய, அடிப்படை வசதிகளை பொருத்த மட்டில் இலங்கையில் வாழும் இந்தியவம்சாவழி தமிழர் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே வாழுகின்றனர் என்பதனை பல்வேறு சமூக பொருளாதார ஆய்வுகள் எடுத்துக் கூறுகின்றன.

இலங்கையின் மத்திய வங்கி தனது 1988 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் இலங்கையின் நகரங்களில் வாழும் மக்களது தலைக்குரிய (வருடாந்த) வருவாய் ரூபா 11,654- என்றும் கிராமியப் பகுதிகளில் அது ரூபா 8572/- என்றும் குறிப்பிட்டுள்ளது. அண்மை கணிப்பீடொன்றின்படி தோட்டப்புறங்களில் தலைக்குரிய வருவாய் ரூபா 5,600/- என தெரிய வருகின்றது. இதிலிருந்து தோட்டப்புறமக்களது வருமானங்கள் எந்தளவுக்கு பின் தங்கியதாக காணப்படுகின்றது என்பது புலப்படுகின்றது.

இவ்வாறு இச்சமூகத்தினரின் வருமானம், வாழ்க்கைத் தரம் ஆகியன ஏன் பின்தங்கியதாக உள்ளன என்பதனை நாம் அவதானித்தால் அதற்கான காரணங்களை நாம் இனங்காண முடியும்.

1948 ஆம் ஆண்டோடு இவர்களுடைய வாக்குரிமையும், பிரஜாவுரிமையும் இந்நாட்டில் பறிக்கப்பட்டன. இதனால் இவர்கள் பல வழிகளிலும் இரண்டாந்தர பிரஜைகளாகவே நடாத்தப்பட்டனர் பொருளாதார வாய்ப்புக்களும் வசதிகளும் இல்லாது போயின. அரசசலுகைகள், அரசாங்க உத்தியோகங்கள் என்பன இல்லை என்றாகின. அதே நேரத்தில் தோட்டப்புறங்களில் காணப்பட்ட பாடசாலைகளும் தகுதியற்றனவாகவே காணப்பட்டன. அத்துடன் தொழிலாளர்களும் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டவில்லை, எனவே கிடைக்கக் கூடியதான ஒரு சில வாய்ப்புக்களும் கிட்டாது போயின. பிரஜாவுரிமை இன்மையால் உயர்கல்விக்கு செல்லவில்லை என்பது உண்மையானாலும் அக்கருத்தினை வேறொரு கோணத்தில் இருந்து பார்த்தால் இன்னுமோர் உண்மையும் புலனாகும். அதாவது 1964 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 134 000 பேர் இந்திய பாக்கிஸ்தானிய (வசிப்போர்) பிரஜாவுரிமை சட்டத்தின் கீழ் இலங்கை பிரஜாவுரிமை பெற்றிருந்தனர். உத்தேச கணிப்பீட்டின்படி இத்தொகையில் சுமார் 10,000 பேர் 18–24 வயதுக்கும் உட்பட்டவர்களாக இருந்திருப்பார்கள். இவர்களில் தானும் அந்நேரத்தில் 200 பேர் கூட பல்கலைக்கழகங்களில் படிக்கவில்லை அவர்களில் இருந்தாவது பெரும்பாலானோர் கல்வி கற்றவர்களாகி

யிருக்கலாம். அதுவும் நடைபெறவில்லை. அதே நேரத்தில் பிரஜாவுரிமை இல்லாதோரில் மிகச்சிலர் 1963 ஆம் ஆண்டிற்கும் 1975 ஆம் ஆண்டிற்கும் உட்பட்ட காலப் பகுதிகளில் பல்கலைக் கழகம் சென்று பல்வேறு இடையூறுகளின் மத்தியிலும் கல்வி பயின்றனர். ஆனால் இன்றும் கூட அத்தகைய பேர்களில் விருத்தியோ, முன்னேற்றங்களோ ஏற்படவில்லை.

இவ்வாறு பல இடையூறுகளும், ஆர்வமின்மையும் காரணமாக தொழிலாளர்களின் பிள்ளைகள் கல்வியில் பின்தங்கியதனால் தொடர்ந்தும் தோட்டத் தொழிலாளர்களாகவே குறைந்த ஊதியத்திற்கு தொழில்புரிபவர்களாக இருந்து வருகின்றனர், கல்வியில் ஒரு சமூகம் உயரும் போது அங்கே வாழ்க்கைத் தரத்திலும் உயர்ச்சி ஏற்படுகின்றது என்பது பல்வேறு ஆராய்ச்சிகளின் முடிவாகும்.

இலங்கையில் உள்ள தோட்டங்களில் வாழும் தமிழ் தொழிலாளர்களில் 40 சதவீதமானோருக்கு எழுதவோ வாசிக்கவோ தெரியாது. எஞ்சியதில் 43 வீதமானோர் ஐந்தாம் வகுப்புடனோ அல்லது அதற்கு குறைந்த வகுப்பிலோ படிப்பை நிறுத்திக்கொண்டவர்கள். சுமார் 15 வீதமானோரே 10 ஆம் வகுப்பு அல்லது 12 ஆம் வகுப்பு வரை படிப்பை தொடருகின்றனர். பல்கலைக்கழகம், மற்றும் உயர்கல்விக்கு ஒரு சதவீதமானோர் கூட சென்றதில்லை, எனவே இத்தகைய கல்விபெறுபேறுகளினால் பெறக்கூடிய தொழில் வாய்ப்புக்களும் மிகக்குறைவாகவே உள்ளன.

எனவே சிறந்த தொழில் வாய்ப்புகளுக்கு சந்தர்ப்பம் வேண்டுமானால், உயர்கல்வியும் தொழிற் கல்வியும் அவசியமானவை. இன்று இலங்கையில் உள்ள 6 பல்கலைக் கழகங்களிலும் சுமார் 19,000 மாணவர்கள் உயர்கல்விக்காக தம்மை பதிவுசெய்துள்ளனர் ஆனால் இதில் தோட்டப் பகுதிகளையும், இந்திய தமிழ் சமூகத்தையும் சார்ந்தவர்கள் 1/2 வீதத்திற்கும் குறைவான 100 க்கும் குறைந்த எண்ணிக்கையிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளனர். இது போன்றே இலங்கையில் பணிபுரியும் சுமார் ஒரு இலட்சம் பாடசாலை ஆசிரியர்களில் 2,000 ஆசிரியர்களோ, அல்லது 1984 ஆம் ஆண்டில் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் பணிபுரியும் 515.000 பேரில் 1வீதத்தினரோ கூட இச்சமூகத்தினை சார்ந்தவர்கள் இல்லை இத்தகைய பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களில் பெரும்பான்மையினர் உயர்கல்வி. இடைநிலை தொழிற்பயிற்சி என்பன பெற்றவர்களாகும். இலங்கையின் மக்கள் தொகையில் சுமார் 9 வீதத்தை இந்திய தமிழ் மக்கள் வகித்தாலும், இத்தகைய தொழிலாளர்களில் ஒரு வீதத்தினர் தானும் இல்லை என்ற கசப்பான உண்மையை நாம் நம்பத்தான் வேண்டி உள்ளது. 1985 ஆம் ஆண்டில் இலங்கை பல்கலைக் கழகங்களில் சுமார். 1750 பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் பணிபுரிந்தனர். இதில் 1 வீதமான 14 பேர்கூட இச்சமூகத்தை சார்ந்தவர்கள் இல்லை இதுதான் இன்று இலங்கையில் கல்வி கற்று தொழில் புரிவாகளின் மத்தியில் இச்சமூகத்தவரின் நிலையாக இருக்கிறது.

இவ்வாறு கல்வியில் பின்தங்கிய நிலைமாற்றமுற்று, கல்விகற்ற சமூகமாக மாறும்போது கணிசமான அளவில் கல்வி கற்றோர் எண்ணிக்கையிலும் வீதாசாரத்திலும் அதிகரித்து தொழில் வாய்ப்புக்களையும், அந்தஸ்துகளையும் பெற்றுக் கொள்ள முடியும். தோட்டப்புறபாடசாலைகளின் கல்வி நிலை உயர வேண்டுமானால், அப்பாடசாலைகளில் கற்பிக்கும ஆசிரியர்கள் அப்பகுதிகளை சார்ந்தவர்களாக, அப்பகுதி மாணவர்களின் உயர்ச்சியில் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்தினை அரசு ஏற்றுக் கொண்டதோடு. அதற்காக 1,000 ஆசிரியர்களை நியமிக்க விண்ணப்பங்கள் கோரியபோது தகுதிவாய்ந்த 1500 பேர் கூட தோட்ட தொழிலாளர்களின் மத்தியில் இருந்து விண்ணப்பிக்கவில்லை. அண்மையில் நாடு முழுவதற்கும் 25,000 ஆசிரியர்களை நியமிக்க விண்ணப்பங்கள் கோரியபோது 3 இலட்சம் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. கிடைக்கக்கூடிய ஒரு பதவிக்கு 12 பேர் தகுதிவாய்ந்தவர்களாக இருக்கும் போது தோட்டப்புறங்களில் உள்ள பதவிக்கு அங்கிருப்பவர்களிடையே 2 விண்ணப்பதாரி கூட சரியாக இல்லை இவ்வாறு கிடைக்கும் சில வாய்ப்புக்களும் போதிய கல்வி பெறுபேறுகள் இன்மையால் வீணாகின்றன. அண்மையில் பொலிஸ், கிராம சேவகர்கள் போன்ற உத்தியோகங்களுக்கு விண்ணப்பங்கள் கோரியபோதும் இத்தகைய நிலைமையே காணப்பட்டது. இவ்வாறு போதிய கல்வி இன்மையினால் சமூகத்தின் உயர்ச்சிக்கு அவர்களால் தொண்டாற்ற முடியாது போவது மாத்திரமன்றி, சமூகத்தினாலும் தேசத்தினாலும் அவர்களுக்கு கொடுக்கப்படுகிற வாய்ப்புக்களையும் அவர்களால் பயன் படுத்திக் கொள்ள முடியாது போகின்றது.

இத்தகைய பின்னணியில் தோட்டப்புற மக்களின் கல்வி நிலை உயர்ந்து அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ள வேண்டுமானால், அதற்கு யாது செய்

தல் வேண்டும் என்ற வினா எம்மை எதிர்நோக்குகின்றது. இதற்கு இரண்டு முக்கிய பரிகாரங்கள் தேவைப்படுகின்றன, அவை யாவன.

அ) கல்வியில் முன்னேற ஆவன செய்தல்.
ஆ) இம் மக்கள் சமூகம், ஒற்றுமையுடன் தாம் ஒரு ஒன்றுபட்ட சமூகம் என்ற நிலைப்பாட்டினை வளர்த்து தம்மை ஒரு கட்டுக்கோப்புமிக்க அரசியல் சக்தியாக வளர்த்துக் கொள்ளுதல்.

முதலாவது பரிகாரத்தினை பொருத்தமட்டில் மூன்று வேறுபட்ட சாராரது ஒன்றிணைந்த பங்களிப்பும் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது.

தோட்டப்புறங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி வசதிகள் மிக மிகக் குறைவு. ஆசிரியர்கள் போதாது. எனவே தகுதியான ஆசிரியர்களையும் போதியளவான ஆசிரியர்களையும் நியமிப்பதுடன் ஏனைய வசதிகளான கட்டிடங்கள் போன்றவற்றை சிறந்த முறையில் அமைத்து கொடுப்பது அரசினது கடமையாகும். இச்சமூகத்தின் தலைவர்களின் அரசியல் சாணக்கியங்களினால் அண்மை காலங்களினால் தோட்டப்புற பாடசாலைகளின் முன்னேற்றத்தில் ஓரளவிற்கு அக்கறை காட்டப்பட்டு வருகின்றது.

இரண்டாவது பெற்றோரின் கடமை. இலங்கையில் கல்வி இலவசமானபோதிலும், சில தேவைகள் பெற்றோரினாலும் பூர்த்தி செய்யப்படவேண்டியுள்ளது. உணவு, போக்குவரத்து, எழுத்து உபகரணங்கள், உடை, சிறிய பாடசாலை கட்டணங்கள் என்பன அத்தகையன. தொழிலாளர்களின் குறைந்த வருவாய் இதற்கு தடையாக இருந்தபொழுதிலும், பெற்றோரது சரியான செலவிடும் முறைகளும், செலவினங்களின் முக்கியத்துவ ஒழுங்கில் கல்விச் செலவுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதனாலும், ஒரு சில சாத்தியமான தியாகங்களினாலும், இப்பிரச்சினையை சமாளிக்க முயலவேண்டும். யாவற்றிற்கும் மேலாக தமது பிள்ளைகளின் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்களை படிக்கவைப்பதில் ஆர்வம் காட்ட முன்வருதல் வேண்டும்.

மூன்றாவது ஆனால் முக்கியமான பங்கு மாணவர்களினால் நிறைவேற்றப்படவேண்டியதாகும். மாணவர்கள் கல்வியின் நோக்கினையும் முக்கியத்துவத்தினையும் உணர்ந்து, தமது சூழல், வசதிகள் ஆர்வம் என்பனவற்றிற்கு ஏற்றவாறு கற்கை நெறிகளை தெரிவு செய்து, கவனமாகவும் முழுமையாகவும் கல்வியில் ஆர்வத்தினை செலுத்தவேண்டும். தாம் வாழ்வில் முன்னேற குறுக்கு வழிகள் இல்லை என்ற தத்துவத்தை நம்புவதுடன் கல்வி ஒன்றே இலகுவானதும், தவறு ஏற்படமுடியாத வழி என்பது தீர்க்கமான நம்பிக்கையினை வளர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும். அதே நேரத்தில் மாணவர்கள் இந்த கற்கை நெறிதான் சிறந்தது என்பதனை விட தமக்கு ஆர்வமும், போதியளவு வசதியும் உள்ள கற்கை நெறிகளை தெரிந்தெடுத்து குறைந்தபட்சம் பல்கலைக்கழக பட்டத்தினையாவது பெற்றுவிட வேண்டும் என்பதில் தீவிரமாயிருத்தல் அவசியமாகிறது. அது போன்றே 10 அல்லது 12 ஆம் வகுப்பு தகுதிகளுடன் மாத்திரம் தொழில்களில் சேர்ந்தோர் அத்துடன் திருப்தி அடைந்து விடாது தொடர்ந்தும் கல்வியினை தொடருவதுடன் அதன் மூலம் மேலதிக தகுதிகளையும், தொழிற்பயிற்சிகளையும் பெற்றுக்கொள்வது மிக அவசியமாகும்.

இரண்டாவது பரிகாரம் தொழிலாளர்கள் மத்தியிலும், பொதுவாக அச்சமூக அங்கத்தவர்கள் அனைவர் மத்தியிலும் அரசியல் ரீதியாக ஐக்கிய உணர்வு ஏற்படுத்துவதனை உறுதி செய்வதாகும். இன்றைய அரசினது இனரீதியாக விகிதாசார ஒதுக்கீடு செய்வதனையும் திறமைக்கு இடம் அளிக்கவேண்டும் என்ற கொள்கையின் வளர்ச்சியும் வாய்ப்பான ஒரு சூழ்நிலையாகும். இன்றைய நிலையில் இலங்கை வாழ் இந்திய தமிழருக்கு இனரீதியாக விகிதாசார ஒதுக்கீடு, தொழில், உயர்கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புகளின் மீது பிரயோகிக்கப்படும்பட்சத்தில் அது இச் சமூகத்தின் போக்கில் ஒரு புரட்சியான நிலைமையை ஏற்படுத்திவிடலாம். இதற்கு இவர்கள் அனைவரும் ஐக்கியப்பட்டு, கட்டுக்கோப்புடன ஒரே தலைமையில் ஒன்று சேர்ந்து தனது கோரிக்கைகளை முன்வைக்கும்போது அவர்களை சார வேண்டிய பொருளாதார வாய்ப்புக்களும் உரிமைகளும் இலகுவாக அவர்களை வந்து சேர வாய்ப்புக்கள் உருவாகும் என நம்பலாம்

இறுதியாக கூறுவதனால் தோட்டத் தொழிலாளர்களிடையேயும் இந்திய வம்சாவழி தமிழர்களிடையேயும், தொழிற்பயிற்சியும் வளருவதே அவர்கள் எதிர்காலத்தில் ஒரு திட்டவட்டமான முறையில் முன்னேறுவதற்கான ஒரே வழி என்பதனை தவிர இன்றைய சூழ் நிலையில் அச்சமூகத்தின் எதிர்கால சுபீட்சத்திற்கு வேறுவழி எதுவும் இருப்பதாக தோன்றவில்லை

தமிழ்விழா சிறப்படைய எங்கள்

**வாழ்த்துக்கள்**

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே
—சி. வை. தா.

# K. மாரப்பன்

(மரக்கறி வியாபாரம்)
**பன்சல வீதி,**
**பண்டாரவளை.**


---


*With Best Compliments from*

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.
—மகாகவி பாரதி

# Usha Traders

No. 103, Main Street,
BANDARAWELA.

**திரு. இ. கமலநாதன்**
B. A. Cey. Dip-in-Edu. M. A. Ed.
முன்னாள் தமிழ் இலக்கிய கலாமன்ற
பொறுப்பாசிரியர்.
புனித சூசையப்பர் கல்லூரி
பண்டாரவளை.

# பல்கலை வித்தகர்

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாக்
தமிழ் செய்யுமாறே''

பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் அவர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்களிலும், விரிவுரைகளிலும், அவரால் நினைவு கொள்ளப்படும் வாசகம் இதுவாகும். இவ் வாசகத்தினை நினைவு கொள்வதோடு மாத்திரம் அவர் நிற்பதில்லை. அதற்கேற்பத் தமது வாழ்க்கையையும் அமைத்து வாழ்ந்து காட்டினார். எம்முன் எத்தனைபேர் கூறுகின்றபடி வாழ்கின்றோம்; மேடையிலே மக்கள் முன்னிலையிலே எம்மை மீறிய தத்துவங்களையெல்லாம் கூறிவிடுவோம் ஆனால் கூறியபடி நடக்கமுடிவதில்லை; முனைவதுமில்லை.

பேராசிரியர் வித்தியானந்தன் தாம் கூறியபடி வாழ்ந்து காட்டினார்; அவர்வாழ்வே மற்றையோருக்கு வழிகாட்டும் பாடம். அவர் தமது பேச்சிலும் செயலிலும் ஒருமைப்பாட்டைக்கண்டவர், அவ்வழியிலும மாணவர்களுக்குக் கல்வியூட்டி ஒரு பரந்த மாணவ உலகையே தமதாக்கிக் கொண்டவர். தமிழுக்காக, தமிழ் மொழி வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய சேவைகள அளப்பரியன. தமிழ் மொழியைத் தம் வளர்ச்சிக்காகப் பயனபடுத்தியவரல்லர் பேராசிரியர். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்தவர். தமிழ் மொழி வளர்ச்சிக்காக உழைத்த அறிஞர்களுள் 20ஆம் நூற்றாண்டில் ஒப்புயர்வற்று ஓங்கி உயர்ந்து விளங்குபவர் பேராசிரியர் வித்தியானந்தன்.

தமிழ் மொழியின் சிறப்பை உலகெலாம் பரப்பியதோடு மாத்திரம் இன்றித் தமிழர் பாரம்பரியக் கலையெல்லாம் மீட்டெடுத்து வெளிக்கொணர்ந்து சிறப்பித்து உலகறியச் செய்தவர் பேராசிரியர். தமிழ் மொழியைக் கற்க மாணவர்கள் வெட்கப்படுகின்ற-பயப்படுகின்ற காலகட்டத்திலே தமிழ் மொழியை விரும்பிக் கற்றும், கற்பித்து விழாக்கள் கண்டு புகழ்பெற்று உயர்பதவியும் பெற்றுத் தமது மாணவர்களுக்கும் தமது சமுதாயத்திற்கும் புகழினையும் மகிழ்வினையும பெற்றுத் தந்தவர் பேராசிரியரே. அவரது தமிழ்ப்பற்று உணர்வு பூர்வமானது அதனால் உறுதியானது எந்த இடர்வந்தபோதும் மாற்றமடையாது வளர்ந்து வந்தது.

அவரது தமிழ பற்றினையும் மன உறுதியினையும் 1974ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது கண்டுகொண்டோம். யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்துவதில் ஏற்பட்ட தடைகளை எல்லாம மன உறுதியுடன் முறியடித்து கொண்டகொள்கையில் சிறிதும் தளும்பாமல் தமிழ் மண்ணில தமிழ மாநாட்டை நடத்தி வெற்றி பெற்றவர் பேராசிரியர் அவரது தலைமைத்துவ பண்பை உணர்ந்த தவத்திரு தனிநாயகம் அடிகளார் தான் வகித்து வந்த தலைமைப் பதவியை பேராசிரியர் வித்தியானந்தனிடம் தந்து அவருடன் கூடி நின்று மாநாட்டு அலுவல்களுக்கு ஒத்துழைப்பு நல்கினார் தமிழாராய்ச்சி மாநாடு மக்கள் விழாவாக யாழ். மண்ணில சிறப்புடன் நடந்தது. பேராசிரியர் வித்தியானந்தன் நிதானமாக எவ்விதமான பதற்றமுமில்லாமல் செயலாற்றியமை மக்கள் மனதில் நம்பிக்கையை வளர்த்தது. விழா வெற்றிகரமாக நடந்தேறியது. பேராசிரியர் வித்தியானந்தனின் துணிவினையும் நிலைதளம்பாத நிலையினையும் கண்டு தமிழ்மக்களையும் மற்றோர்களும் பெருமைகொண்டனர். அவரை வாழ்த்தி நின்றனர். அந்த மாமனிதர் வித்தியானந்தன் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பதில் எமக்கும் பெருமைதானே!

பேராசிரியர் பாடம் சொல்லித்தரும் அழகே தனித்துவமானது, பேசும்போது, பாடங்களைக் கற்பிக்கும்போது எழுத்துக்களைத் தேவை கருதி அவை அவற்றின் மாத்திரை அளவிற்கேற்பக் கூட்டியும், குறுக்கியும் ஒலிக்கவைத்துத் தாம் கற்பிக்கவேண்டிய விடயத்தை மாணவர் மனதில் பதியவைத்து விடும் தனிச்சிறப்பு அவருக்கே உரியது. தமிழ் இலக்கியங்களைக் கற்பிக்கும்போது அவர் காட்டும் ஆர்வம் அளவிறந்தது. சிலப்பதிகாரம், மணிமேகலை திருக்குற்றலக் குறவஞ்சி, பாரதிபாடல் முதலியவற்றைக் கற்பிக்கும்போது மகிழ்வுடன் பாடங்களை நடத்துவார். இலக்கியங்களைக் கற்பிக்குபோது அவர் இலக்கியங்களுக்குள் மூழ்கி அவற்றின் சிறப்பை, நயத்தைச் சுவைத்து மாணவர்களுக்கும் பகிர்ந்தளித்து மகிழ்ச்சி கொள்வார்.

தமிழ் படிக்கும் மாணவர்களைப் பெரிதும் பயமுறுத்துவது தமிழ் இலக்கணமாகும் இவ் விலக்கண வகுப்புக்களைப் பேராசிரியர் வித்தியானந்தன் தனது கற்பித்தல் திறமையினால் கல கலப்பாக்கி மாணவர்களிடத்து ஆர்வத்தினை ஏற்படுத்தி விடுவார். நன்னூல், தொல்காப்பியம் போன்றவற்றைக் கற்பிக்கும்போது வேண்டிய இடங்களில் நடைமுறை உதாரணங்களைக்கூறி விடயத்தினை மாணவர்கள் மனதில் பதித்துவிடுவார். பேராசிரியர் வித்தியானந்தனிடம் இலக் கணத்தினை முறையாகக் கற்றவர்கள் என்றுமே இலக்கணப் பிழைகள் விடமாட்டார்கள் என்பது பலரது நம்பிக்கையாகும்.

பேராசிரியர் தமது கற்பித்தல் நடத்தும்போது தரும் விளக்கம் கூறும் உதாரணக்கதைகள் பல்கலைக்கழகத்துள் பிரபல்யமடைந்துவிடுவது வழக்கம். இந்தக் கவர்ச்சியால் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் வேறுதுறை சார்ந்த மாணவர்கள்கூட பேராசிரியரின் குறிப் பிட்ட விரிவுரைகளுக்கு அவரின் அனுமதி பெற்று சமுகந்தந்து மகிழ்வதுண்டு. மருத்துவத்துறை மாணவர்கள் இவ்வண்ணம் அவர் விரிவுரைகளுக்கு வந்திருப்பது பேராசிரியரின் கற்பித்தலுக்குக் கிடைத்த பெருவெற்றியாகும். தற்காலக் கல்வியியலாளர்களால் பெரிதும் போற்றப்படும் மாண வர் மையக்கல்வி என்ற தத்துவம் பேராசிரியர் நடத்தும் கட்டுரை வகுப்புகளிலிருந்துதான் பிறந்ததோ என்று எண்ணத்தோன்றுகின்றது. மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்கள் சந் தேகங்களை அறிந்து அவற்றை அவர்கள் மூலமே நீக்கி வெற்றி காண்பது அவரது தனித்துவ் மான கற்பித்தல் முறையாக இருந்தது.

கற்பித்தல் துறையில் இருந்து நிர்வாகத்துறைக்கு உயர்வு பெற்றவர்கள் காலப்போக்கில் கற்பித்தலை மறந்து தனித்து நிர்வாக வேலைகளுடன் தம்மைப் பழக்கப் படுத்திக்கொள்வது வழக்கம் இத்தகைய வழக்கத்திற்கு மாறான போக்குக்கொண்டவர் பேராசிரியர். பல்கலைக்கழக உபவேந்தராகப் பணியாற்றிய காலத்தில் தமது துறையில் முதலாம் வருட, இரண்டாம் வருட, இறுதி வருட மாணவர்களுக்கு விரிவுரைகள் நடத்தி வந்ததை நாம் அறிவோம் தனது அறிவினை வீணாக்கக்கூடாது, அதைத் தமிழ்ச்சமூகம் பெற்றுப்பயனடைய வேண்டும் என்ற பேரவாவினால் இக்கடமையினை இறுதிவரை நிறைவேற்றி வந்துள்ளார். அத்துடன் நின்று விடாது முதுகலைமாணி ஆய்வினை மேற்கொள்பவர்களுக்கும் கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொள்பவர்களுக்கும் மேற்பார்வையாளராகக் கடமையாற்றி உரியமுறையில் உற்சாகத் துடன் அவர்களை நெறிப்படுத்தினார். அவர்கள் ஆய்வினை வரிக்குவரி வாசித்து வேண்டிய திருத்தங்களைச்செய்து ஆய்வு சிறப்பான முறையில் அமைய வழிகாட்டுபவர். அவரது எத் தனையோ வேலைகளுக்கு மத்தியிலும் அவர் ஆற்றும் இப்பணிகண்டு வியப்படையாதவர் யாருமிலர்

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நந்நயம் செய்து விடல்''

இந்தக் குறளை எமக்கெல்லாம் கற்பித்தவர் பேராசிரியர். அதன் வழி ஒழுகியும் வாழ்ந்தும் காட்டினார். இதனால் தமது வாழ்வில் பெருவெற்றி கண்டுள்ளார் இவருடைய மனம் வருந் தும்படி நடந்து கொண்டவர்கள் கூட இவர் நிர்வாகியாக இருந்த காலத்திலோ அல்லது அதற்கு முன்போ எவ்வித பாதிப்பிற்கும் உள்ளாகியிருக்க மாட்டார்கள். மாறாகப் பேராசிரியர் அவர் களிடமிருந்து வேறோர் காலத்தில் நன்மை பெற்றவராகவே அவர்கள் இருப்பார்கள். அவர் சிறியன சிந்தியாத பண்புள்ளம் கொண்டவர். இத்தகைய பெருந்தகை யாழ். பல்கலைக்கழ கத்தின் தலைவராக இருந்த காலமே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றின் பொற்காலம் என்று கொள்ளலாம். யாழ். பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காகப் பேராசிரியர் செய்த முயற்சி கள் அளப்பரியன.

போக்குவரத்துச் சீர்கேடான காலகட்டத்தில் சிறிய பஸ் வண்டிகளிலும் பல மைல் தூரம் நடந்தும் தலைநகர் சென்று பல்கலைக்கழகத் தேவைகளை நிறைவு செய்த அவரது பணி விலைமதிப்பற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே மருத்துவபீடத்தினை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த நேரத்திலே அவரது மனைவியார் திடீரென நோய்வாய்ப்பட்டதும், உரிய நேரத்தில் அவரை வைத்தியரிடம் அழைத்துச்செல்லத் தவறியதால் அவர் உயிர் பிரிந்ததும் யாவரும் அறிந்ததே. அதற்காக அவர் அடைந்த வேதனை குழந்தை போல் தேம்பித் தேம்பி அழுத காட்சி என்றென்றும் மறக்க முடியாது.

1987 இல் நாட்டில் நடைபெற்ற அசம்பாவிதங்களை அடுத்துப் பல்கலைக்கழகத்தை ஒழுங்கு செய்யும் முயற்சியில் அவர் தனது உயிரையே பணயம் வைத்துச் சேவையாற்றினார் எனலாம். அச்சந்தர்ப்பத்தில் கடுமையான பரிசோதனைகளுக்கிடையில் காங்கேசன்துறை வீதியால் ஒரு தனியார் மோட்டார் வண்டி மாத்திரமே யாழ்நகர் வந்து சென்று கொண்டிருந்தது அது பேராசிரியரின் மோட்டார் வண்டியே. அவரும் அவரது இளைய சகோதரருமே அதில் பயணம் செய்தவர்கள். அவர்கள் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தபோது பல தடைகளை இவர்களே அகற்றவேண்டிய நிலையும் இருந்தது. ஓரிடத்தில் உயிரற்ற சடலம் ஒன்றைக்கூடப் பேராசிரியர் தனது கையினால் அப்புறப்படுத்திப் பிரயாணத்தைத் தொடர்ந்துள்ளார்கள். இவ்வளவும் எதற்காக அவர் செய்தார்கள்? 'தமிழரின் சொத்தான பல்கலைக்கழகம் பாழ்ப்பட்டு விடக்கூடாது, எப்படியாவது அங்குசென்று சீர்செய்துவிடவேண்டும்' என்ற அவாவினால் அல்லவா!

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட விவசாய பீடம் கூட பேராசிரியர் வித்தியானந்தனின் முன் முயற்சிகளின் பெறுபேறு என்றே தற்போதைய யாழ்ப் பல்கலைக்கழக உபவேந்தர் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் வித்தியானந்தன் மிகவும் இளகிய மனம் கொண்டவர் அவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய காலத்திலும் தமிழ் மாணவர்கள் பெரும் பயனடைந்தார்கள். புதிதாகப் பல்கலைக்கழகம் சேரும் மாணவர்களை அன்புடன் வரவேற்று. வேண்டும் உதவிகளைச் செய்து. தமது காரிலேயேற்றிப் பல்கலைக்கழகத்தினையும் அதன் அயற்புறங்களையும் சுற்றிக் காண்பித்து அவர்களைப் புதிய சூழலுக்கு ஆயத்தப்படுத்தி விடும் அருங்குணங் கொண்டவர் பேராசிரியர் வித்தியானந்தன். அத்துடன் நின்றுவிடாது மாணவர்களின் குடும்ப நிலையை அறிந்து பல்கலைக்கழகம் வழங்கும் உதவிப் பணத்தைப் பெற்றுக் கொடுக்கவும் உதவி செய்வார். அவரது இப்பணி பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும் மாணவர்களின் பெற்றோர்களுக்குப் பெரும் ஆறுதலாக அமைவதுண்டு கூண்டுக்கிளிகளாக இருந்த தமது பிள்ளைகள் பல்கலைக்கழகத்தில் புதிய சூழலில் எப்படியிருப்பார்களோ என்று கவலையுறும் பெற்றோர்கள் பேராசிரியரைத் தொடர்பு கொண்டு தமது பிள்ளைகள் பற்றி இவருக்கு அறிவிப்பதுண்டு. அத்துடன் தமது கடமைகள் முடிந்து விடுவதாகவும் நினைப்பதுண்டு. அதற்கேற்ப அந்த வித்தி என்ற மாமனிதரும் அவர்கள் அனைவரையு தமிதை போல் கவனித்துக் கொள்வார். இத்தகைய பண்பு நிறைந்த பெருந்தகை பல்கலைக்கழகத்தில் இருந்ததால் பல்கலைக்கழகம் பெருமையடைந்தது என்பதில் மிகைப்பாடு எதுவும் இல்லையென்று கூறலாம். இதனால்தானே "வித்தி" என்ற ஆரம்பத்துடன் இரண்டு பல்கலைக்கழகங்கள் அரசினல் நிறுவப்பட்டன என்று எண்ணவும் தோன்றுகின்றது.

பேராசிரியர் வித்தியானந்தனின் எளிய நடைமுறை அவரிடமுள்ள மற்றொருசிறப்புப் பண்பு ஆகும். அவர் காட்சிக் கெளியர். அவர் உள்ளமும் எளிமையே, எவராகவிருந்தாலும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் அவரைக்கண்டு தமது தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடிவதைப் பல்கலைக்கழகத்துள்ளும் வெளியேயும் காணக்கூடியதாய் இருந்தது. இனமதமொழி வேறுபாடன்றி சகலருக்கும் உதவி செய்வார். பெரிய மனிதர்கள் தமது தனித்துவத்தைக் காட்டுவதற்கு யாருடனும் அதிகம் பேசாமல் எதிலும் அதிகம் கலந்து கொள்ளாமல் தம்மைக் கட்டுப்படுத்தி அதன் வழி மற்றோரை அந்நியப்படுத்தி வாழ்வர்.. ஆனால், பேராசிரியர் வித்தியானந்தன் என்ற மா மனிதர் இந்த நடைமுறைக்கு விதிவிலக்காக மிக இலகுவான மனிதராக எளிமையான வாழ்க்கை நடத்தி வெற்றி கண்டுள்ளார்

வித்தியானந்தன் என்ற அவரது பெயர் 'வித்தி' என்ற முன்றெழுத்தாகச் சுருங்கிய போதிலும் அவ்வெழுத்துக்களுக்கு இருக்கும் சக்தி இமயமலையை விட உயர்ந்தது. ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்கு மேலாக வித்தி என்ற நாமம் தமிழ் மக்களால் அன்பாக அழைக்கப்பட்டு வருகின்றது என்றால் அந்த மனிதரின் உண்மையான பண்புதான் அதற்கு காரணம் என்று துணிந்து கூறலாம்.

வடக்கு கிழக்கு இணைப்புக்கு என்றே வித்திட்டவர் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் கிழக்கில் பிரசித்தி பெற்ற நாட்டுக்கூத்துகளை புது மெருகுடன் மேடையேற்றி அவற்றை வடக்கேயும் கொணர்ந்து மக்கள் நாட்டமுள்ளவையாக்கி வடக்கிற்கும் கிழக்கிற்கும் இணைப்புப் பாலமாக விளங்கினர்; கிழக்கில் புகழ் பெற்ற அண்ணாவியார் மாநாட்டினை ஒழுங்கு செய்து தமிழ்ப் பாரம்பரிய வளர்ச்சியில் பெரும் சேவையாற்றி வெற்றி கண்டவர் பேராசிரியர் சிறிய குழந்தைகளிடம் அலாதியான பிரியம் கொண்டவர் அவர், குழந்தைகளைக் கண்டால் தாமும் குழந்தையாக மாறிவிடுவார். தமது சகோதரரின் குழந்தையுடனும் வேறு குழந்தைகளுடனும்

நேரம் போவது தெரியாமல் விளையாடி உரத்துச் சிரித்து மகிழ்வார். அச்சந்தர்ப்பங்களில் நாம் அங்கு பேராசிரியரையோ, உபவேந்தரையோ அல்லது வித்தியானந்தனையோ காணமுடியாது. அவர் தமது குழந்தைப் பராயத்திலே எப்படி இருந்திருப்பார் என்பதையே கண்டு கொள்ளலாம்.

பேராசிரியர் வித்தியானந்தன் தமிழன்னையின் தவப்புதல்வன் 1974 இல் தமிழாராய்ச்சி மாநாட்டில் தமிழன்னைக்கு அவர் ஆற்றிய தொண்டு தமிழ் கூறும் நல்லுலகம் உள்ளளவும் நீண்டு நிலைத்திருக்கும். ஆசிரியராக, பேராசிரியராக, உபவேந்தராக அவர் வாழ்ந்து காட்டிய முறைமை பலருக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. இன்னா செய்தாரையும் மன்னிக்கும் அவர் மனப்பாங்கு அவரை மனிதருள் மாணிக்கமாக்கி விட்டது. அவரது இளகிய மனமும், இரக்க சிந்தனையும், குழந்தை உள்ளமும் அவரை இமயமலை உச்சிக்கே உயர்த்தி விட்டது. தமிழ் மொழி வளர்ச்சியில இஸ்லாமியர் கொண்டுள்ள பங்கினை ஆராய்ந்து வெளியிட்டார். பேராசிரியர் வித்தியானந்தன் ''பிறையன்பன்'' என்ற புனை பெயரில் ''கலையும் பண்பும்'' என்ற நூலினை வெளியிட்டு முஸ்லிம்களின் தமிழ்ப்பற்றினையும் அவர்கள் தமிழ்மொழிக்காற்றிய தொண்டினையும் வெளிக் கொணர்ந்து பாராட்டினைப் பெற்றார்.

கிறிஸ்தவர்கள் தமிழ்த் தொண்டினையும், தமிழ்ப்பற்றினையும் நன்குணர்ந்தவர் பேராசிரியர், இத்துறையில் நன்கு ஆராய்ச்சி செய்து இரு முக்கிய ஆக்கங்களை வெளியிட்டார். ஒன்று ''கிறிஸ்தவரும் ஈழத்திலே தமிழ் வளர்ச்சியும்'' என்பது, மற்றையது ''அமெரிக்க மிசனும் தமிழர் கல்வியும்'' பற்றியது. இவற்றின் மூலம் கிறிஸ்தவர் தமிழ் மொழிக்காற்றிய தொண்டினையும் உலகறியச் செய்து பெருமை கொண்டார். அவரது இவ்வாறான செயற்பாடுகளால் அவரை மதிக்கின்ற-இன்னும் அவரை உணர்ந்து கொண்ட மனிதர்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி பெருகிக் காணப்படுகின்றனர்.

பேராசிரியர் இவ்வாறாக எம்மிடையே வாழ் வாங்கு வாழ்ந்து காட்டிய காரணத்தினாலே தான் அவரை அவரது நன்மாணாக்கரில் ஒருவரான பேராசிரியர் அ சண்முகதாஸ் அவர்கள் ''மாமனிதர்'' என்று குறிப்பிடுவர். உண்மையில் மாமனிதன் என்ற வார்த்தையின் பொருளுரைத்த தகுதியுடையவராக வாழ்ந்து காட்டியவர் பேராசிரியர் வித்தியானந்தன அவர்கள்;

அவர் நாமம் பல்லாண்டு வாழ்க

*********

# திக்கெட்டும் வாழ்த்துவோம் தேன்தமிழே !

கண்ணாக நாம் காக்கும் கன்னித் தமிழே
 கருத்தினிலே வாழுகின்ற கன்னல் தமிழே
மண்ணுலகின் மாட்சிமை யேமதுரத் தமிழே
 மலைமடுவெலா மாளுமன்னைத் தமிழே
எண்ணமெலா மெடுத்தாளும் இனியதமிழே
 எத்திக்கும் மணம் பரப்பும் இசைத் தமிழே
வண்ணமதாய் வலிமை பூண்ட வண்டமிழே
 வாயார வாழ்த்துகின்றோம் வண்டமிழே
பார் போற்றும் பன்னரிய பைந்தமிழே
 பக்திக் கொரு மொழியான பயில் தமிழே
சீர் மிக்க செவிக்கினிய செந்தமிழே
 சேயரெம் சிந்தை மகிழ் சீர் தமிழே
ஊர் தொறும் உலவி வரும் ஒண் தமிழே
 ஓயாது ஒலித்திடும் உயர் தமிழே
தீர்த்திட்டோம் தாகத்தைத் தீந்தமிழே
 திக்கெட்டும் வாழ்த்திடுவோம் தேன் தமிழே!

**சோ. சந்திரசேகரன்**
B. Ed. (Hons) Cey. M. A. (H' Shima)
தலைவர், சமூக் விஞ்ஞான
கல்வித்துறை
கொழும்பு பல்கலைக்கழகம்

# மலையக கல்வி வளர்ச்சி பற்றிய சில கருத்துக்கள்

இந்திய மரபுவழித் தமிழர்கள் ஏறத்தாழ 1825ம் ஆண்டு தொடக்கம் வரத் தொடங்கினர், ஆயினும் அவர்களது கல்வி வளர்ச்சிக்கான ஏற்பாடுகளை அரசாங்கம் 1900 ஆண்டின் பின்னரே மேற்கொள்ளத் தொடங்கியது ஆங்கில குடியேற்ற நாட்டரசாங்கம் இவர்களுக்கு கல்வித் தேவை என்ற ஒன்று இல்லை என்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. இதன் பின்பு பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கிருந்த தாராண்மை வாத இயக்கங்கள் மற்றும் இந்திய அரசாங்கத்தின் வற்புறுத்தலின் பேரிலேயே சில நடவடிக்கைளை யாவது இலங்யின் குடியேற்ற அரசு மேற்கொள்ளத் தொடங்கியது.

1900–1970 காலப்பகுதியில் பெருந்தோட்ட மக்களின் கல்வி ஏற்பாடுகளை தோட்ட நிர்வாகமே செய்து வந்தது. 1906, 1920 1937, ஆகிய ஆண்டுகளில் கல்விச் சட்டமூலங்கள் இவவாறான ஏற்பாட்டையே திரும்பத்திரும்ப சிறு மாற்றங்களுடன் எடுத்துக் கூறின, வர்த்தக் நோக்கில் இயங்கிய தோட்டநிர்வாகம் ஒரு வசதிமிக்க கல்வி முறையை தோட்டப்பகுதிகளிலே உருவாக்கியிருக்க முடியாது. இதன் காரணமாக் மிகவும் சீர்கேடான குறைபாடுகள் மிக்க மிக எளிமையான ஒரு கல்வி முறையே நடைமுறையில் இருந்து வந்தது, குடியேற்ற நாட்டு ஆட்சிக்காலத்தில் நிலவிய இவ்வாறான பின்தங்கிய கல்வி முறை சுதந்திரத்தின் பின் உடனடியாக் முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை, 1948 பின் இம்மக்கள் குடியுரிமையும் வாக்குரிமையையும் இழந்து அதன் காரணமாக அரசியல் பலத்தை இழந்து நின்றமையால இவர்களது பொருளாதார சமூக் வாழ்விலும் கல்வித்துறையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படவில்லை.

கல்வி வசதிகளை பயன்படுத்தி பிறசமூகத்தவர்கள் அடைந்த பொருளாதார, சமூக் நன்மைகளை இவர்கள் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் தொடர்ந்தும் தோட்டத் தொழிலாளர் சமூகமாக்வே கடந்த ஒன்றரை நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வருகின்றனர் 1825 - 1900 காலப்பகுதியில் இவர்களுடைய கல்வி வளர்ச்சியில் குடியேற்ற அரசு அக்கறைகாட்டவில்லை எதுவித சட்ட ஆக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை சாதாரண திண்ணைப் பள்ளிகள் கூட ஏற்படுத்தப்படவில்லை. ஒருசில கிறிஸ்தவ மிசனறிமார் சமயத்தைப் பரப்பும் நோக்குடன் ஆங்காங்கு தோட்டப்பகுதிகளில் சிறிய பாடசாலைகளை நிறுவியிருந்தனர்.

1900 – 1976 காலப்பகுதியில் பல்வேறு சட்ட ஏற்பாடுகளும் தோட்டப்பகுதி மக்களின் கல்வி வளர்ச்சிகளின் பொறுப்பை தோட்ட நிர்வாகத்திடம் ஒப்படைத்திருந்தன. 1905–ம் ஆண்டு இதற்கான சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன இது இன்றுவரை நிலைத்திருக்கின்றது 1920, 1937–ஆம் ஆண்டுச் சட்டங்கள் இவ்வாறான ஏற்பாடுகளைச் சிறு திருத்தங்களுடன் கொண்டிருந்தன 1960.ஆம் ஆண்டில் உதவிபெறும் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்க் வழி செய்யும் புதிய சட்டம் இயற்றப்பட்டது ஆனல் தோட்டப் பாடசாலைகள் 1976–ஆம் ஆண்டின் பின்னரே படிப்படியாக அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டன இதனுல் இவற்றின் வளர்ச்சி பெரிதும் தடைப்பட நேர்ந்தது, இன்று இப்பாடசாலைகள் அரசாங்கப் பாடசாலைகளாக இயங்குகின்றன. அதன் காரணமாக இப்பாடசாலைகளின் அபிவிருத்திக்கு வெளிநாட்டு உதவிகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிதாக உள்ளது.

பெருந்தோட்டப் பாடசாலைக்ள் தேசிய கல்வி முறையின் ஒரு அம்சமாக ஒன்றிணைக்கபட்டு இருக்கவில்லை. அவை தேசிய கல்விமுறைக்கு அப்பால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு கல்வி முறையாக்வே விளங்கி வந்துள்ளன,

இலங்கையின் கல்விமுறை பல ஆய்வுக்களைச் செய்து பல்வேறு விதந்துரைக்களைச் செய்த பல கல்வி ஆணைக்குழுக்கள் கல்விக் குழுக்கள் என்பவற்றின் அறிக்கைக்ளில் தோட்டப் பாடசாலைக்ளின் அபிவிருத்திக்கான விதந்துரைக்ள் எவையும் காணப்படவில்லை. இலவசக் கல்வியை விதந்துரைத்த கன்னங்கரா குழுவின் 1943, அறிக்கையில் தோட்டப் பாடசாலைகள் பற்றி எதுவித பேச்சுமே இருக்கவில்லை. இவ்வாறுன அறிக்கைக்ள் தோட்டப்பாடசாலைக்ள் பற்றி ஏதேனும் சொல்ல முற்பட்ட வேளைகளில் அவற்றின் விதந்துரைக்ள் கூட பெருந் தோட்ட மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பிரதிகூலமானவையாக பாதகமானவையாகவே அமைந் தன என்பதை வலியுறுத்திக் கூறவேண்டும் 1960-ம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழுவும் 1964-ம் ஆண்டின் தேசிய கல்விக்கான ஆலோசனைகள் பற்றிய அறிக்கையும் பெருந்தோட்ட மக்களின் போதனுமொழி சிங்களமாக அமைத்தல் வேண்டும் என்று விதந்துரைத்தன. இது கடும் கருத்து வேறுபாட்டை ஏற்படுத்திய ஒரு விதந்துரையாகும் நல்லவேளையாக இவ் வாறான கல்வியியலுக்கும், கல்வி தத்துவத்துக்கும் உளவியல் கோட்பாடுக்ளுக்கும் முற்றிலும் ஒவ்வாத முற்றிலும் எதிரான விதந்துரை நடைமுறைபடுத்தப்படவில்லை. ஆயினும் இவ் விதந்துரை அன்று வளர்ந்திருந்த இழிந்த பேரினவாதத்தின் ஒரு வெளிப்பாடாக அமைந்தது இவ்வாறுன கல்வி மொழியில் கைவைக்கும் கேவலமான முயற்சிகளை மலையக மக்கள் இனங் கண்டு போர்க்கொடி தூக்கவேண்டும் கல்வி மொழி மாற்றம், இன பண்பாட்டு, சமய தனித் துவத்தை ஒழித்துக்கட்ட முயல்வதற்கான ஒரு கடுமையான சதி என்று கூறவேண்டும் இதில் மிகவும் வருந்தத்தக்க அம்சம் சில படித்த பேராசிரியர்கள் கூட இவ்வாறான விதந்துரைகளுக் குப் பொறுப்பாக இருந்திருக்கிறார்கள்.

இன்றைய பெருந்தோட்ட அரசாங்கப் பாடசாலைக்ளில் பின்வரும் பிரச்சினைகள் நிலவுவ தாக இனங்காணப்பட்டுள்ளது.

- O ஆசிரியர் பற்றுக்குறை
- O அடிப்படை வசதிகள் இன்மை
- O நிலம் போதியளவு கிடைக்காமை
- O பாடசாலை உபகரணங்கள் இலலாமை
- O போதிய மேற்பார்வை இன்மை
- O பல வகுப்புகளுக்கு ஒரு ஆசிரியர்
- O மாணவர்தம் கல்வியை இடை நிறுத்தம் செய்தல்.

இவ்வாறான பிரச்சினைக்ளைக் கருத்திற் கொண்டு பல செயற்திட்டங்கள் வெளி நாட்டு உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டன. சுவீடன். நோர்வே, ஜேர்மனி, ஆகிய நாடுகள் இந்த பெருந் தோட்டப் பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கான பல செயற் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றன.

மலையகத்தில் உள்ள மொத்தம் 600 தமிழ் பாடசாலைகளில் ஏறக்குறைய 350 பாட சாலைகள் இந்த செயற்திட்டங்க்ளுள் அடங்குகின்றன. எஞ்சியுள்ள 300 பாடசாலைக்ளும் 2000 ஆண்டளவில் முழுமையாக இந்த செயற்திட்டத்திற்கு உட்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. எஞ்சியுள்ள இந்தப் பாடசாலைக்ள் தமது வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் 2000 ஆண்டுவரை காத்திருக்க வேண்டிய நிலை மிகவும் துரதிஷ்டவசமானது. இந்தப் பாடசாலை களின் வளர்ச்சிக்கென வேறுக நிதி ஒதுக்கிடப்படவேண்டும்

வெளிநாட்டு நிதிகள் மலையக பகுதி பாடசாலைக்ளுக்கு சென்றடைகின்றனவா என் பதையும் மலையக அரசியல் தலைமைப்பீடம் கண்காணிக்க வேண்டும் மலையக இளைஞர் களும் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து இன்று கல்வித்துறையில் வழங்கப்பட்டுவரும் பல்வேறு வாய்ப்புக்ளை பயன்படுத்தி கல்வியில் முன்னேற்றங் காணவேண்டும் எடுத்துக்காட் டாக பல்வேறு நிறுவனங்களும் நடாத்துகின்ற அஞ்சல் வழிப்பயிற்சி நெறிகளையும் பகுதி நேர பயிற்சி நெறிகளையும் வெளிவாரிப் பரீட்சைகளையும் பற்றிய தகவல்களைப் பெற முயலவேண்டும் தமக்குப் பொருத்தமான பயிற்சி நெறியைத் தெரிவு செயது கொள்ளவேண்டும் இவ்வாறான வழிமுறைக்ளைப் பின்பற்றி வளரும் சட்டத்தரணிக்ளாகவும் பட்டத்தாரிகளாக வும் கணக்காளர்க்ளாகவும் பலர் ஆகியுள்ளார்க்ள் மலையகத்தில் ஆசிரியர் பதவி பெற்றுள்ளவர் க்ள் இவ்விடயத்தில் ஆழ்ந்த ஈடுபாட்டைச் செலுத்தவேண்டும் தமது உயர் தொழில் தகைமை களை உயர்த்திக்கொள்ளுகின்ற அதேவேளையில் மலையக் இளைஞர் மத்தியிலும் கல்வித் துறையில் ஒரு புத்தூக்கத்தையும் புதிய உற்சாகத்தையும் ஏற்படுத்துவதில் மலையக ஆசிரியர்க ளுக்கு ஒரு பெரும் பொறுப்பே உண்டு.

## With Best Compliments from :

உங்கள் தந்தையர் கட்டி வைத்த
குடிசைகளியே தங்கி விடாதீர்கள்
உலகம் முன்னேருகிறது. நீங்களும்
முன்னேறுங்கள், புதுக்கட்டிடம் கட்டுங்கள்,
புதுவாழ்வு தேடுங்கள்

—மாஜினி

# MOHIDEENS

# &

# SONS

No. 34, Main Street,

Bandarawela.

T. P. 057-2213

## With Best Compliments from :

ஒவ்வொரு நிமிடத்தையும் முக்கியமாக்
கருதிக் குறித்த நேரத்தில்
குறித்த வேலையைச் செய்

—காந்தியடிகள்

# Sri Vinayagar Stores

31, Main Street,

Bandarawela. T. P. 057-2550

அருட்செல்வி எலிசபெத் அ. கா.
B. A. (Ceylon)
பண்டாரவளை, தமிழ் மகா
வித்தியாலயம்.

# வீரமாமுனிவரது தமிழ்ப் பணி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வண்டமிழுக்குத் தொண்டாற்றிய வரகவிகள் பலர் இவ்வரிசையிலே செந்தமிழ் மொழியே சீரிய மொழியென சுவைத்து, சொல்லோவியங்கள் படைத்த வித்தகர் வீரமாமுனிவரைத் தமிழுலகு என்றுமே மறவாது.

தெய்வத் தமிழ் மொழியைத் தேனார்ந்த தாய்மொழியை
வையம் புகழ் வளர் மொழியை – ஐயமறக்
கற்றாரே கற்றார் மெய் கண்டார் பெருஞ் செல்வம்
பெற்றாரே பெற்றார் நற்பேறு.

தமிழிலே துறை போந்த தண்டமிழ்ப் பெரியார் பலர், தமிழன்னை மடியில் தோன்றித் தாய்மொழி பேணினர். ஆனால் தமிழ் வளர்த்த அயல் நாட்டுத் தொண்டருள் முதல்வராக, தமிழ்த் தண்ணொளி பரப்பியவர் தைரியநாதர் எனும் வீரமாமுனிவர். "தமிழ்க் கத்தோலிக்கப் புலவர் கோ எனும் நல்லூர் ஞானப்பிரகாசருடன் சேர்ந்து தமிழுலகும் கத்தோலிக்கமும் அவரை ஏற்றிப் போற்றுகிறது.

இத்தாலிய நன்னாட்டில் இறைதந்த விளக்காக உதித்துக், காலத்தால் அழியாத கத்தோலிக்க தமிழ், இலக்கியங்களை வாடா மாலைகளாக் வடித்தளித்தார். இவரது இயற் பெயர் கொன்ஸ்ரான்ஷியஸ் யோசப் பெஸ்கி. வீரமாமுனிவர் என்று பின் தமிழ் நாமம் தாங்கினார் இயற் புலமையும் செயற்புலமையும் இயல்பாகப் பெற்றிருந்த அவர். யேசு சபைத் துறவியானார். "அருள் தரும் உணர்வு, அன்பு, ஊக்கம் அரும் பொறை, ஈகை மற்றும் மருள் தரும் இயல் நீர் மாட்சி" எனும் பண்புகள் சுடர் விடும் தாரகையாக துறவு வானிலே மாமுனியாக மக்கள் மனங்களில் வாழுகின்ற மாமேதையாகிறார்.

இவரது தமிழ்த்தொண்டு பரந்தது, உயர்ந்தது, பன்முகப்பட்டது, தமிழுக்குத் துறை தோறும் முறையாகவும். முழுமையாகவும் பணிபுரிந்தார். மாணவனாக, ஆசானாக், மாமனிதராக வாழ்ந்தார் முப்பது வயதிற்குப் பிறகும் தமிழ்ச் சுவையறிந்து பழுதறப் பயின்று கடித இலக்கியம், காப்பிய ஆக்கம், உரை நடை மறுமலர்ச்சி, சிற்றிலக்கிய எழுச்சி, இலக்கணப் படைப்பு, அகராதி அமைப்பு மொழியில் முனைப்பு சிறுகதைத் தோற்றம், இலத்தின் தமிழ் உறவுப் பாலம், வள்ளுவத்தை வையக நூலாக்கும் முயற்சி எழுத்து வடிவச் சீர் திருத்தம் சித்த மருத்துவ நூலாக்கம் ஆகிய பன்னிரு துறைகளில் மன்னிய புகழ் படைத்த தமிழ்ப் பணி புரிந்தவர்.

அறவியற் கொள்கையை அணியாகப் பூண்ட இந்த அருட்கவி அறப்பயிர் விளையும் பாங்கினை எடுத்துரைக்கும் விதமே அலாதி. ஊக்கமாகிய ஏரெடுத்து உடலாகிய வயலில் நோன்பாகிய உழவு மேற்கொண்டு, விரதமாகிய செந்நெல் விளைத்து நல்லொழுக்கமாகிய நீர் பாய்ச்சி, ஐம்பொறியென்றும் வேலி காத்து வந்தால் வானக இன்பத்தை வையகத்தில் சுவைக்கலாம். என்பதை

"ஊக்க ஏர் பூட்டி, நோன்பால் உடற்செறு உழுது, நன்றி
வீக்கமேல் விரதச் செந்நெல் வித்தி, நல்லொழுக்க நீரை
போக்க நீடு இறைந்து, தன் ஐம் பொறியெனும் வேலி காக்கில்
ஆக்கமாய்ப் பெரும் வீட்டின்பம், அண்டமேல் விளக்கும் தானே"

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரப்ப, திக்கும் தமிழை பல வடிவங்களில் யாத்த இவர் வெளிநாட்டார் தமிழ் பயில்வதற்காக ஆக்கிய கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், திறவுகோல் ஆகியன இவர் தொகுத்த அகராதிச் செல்வங்கள் ஆகும் தமிழ்

லத்தீன் பேச்சு மொழி அகராதி போர்த்துக்கீச தமிழ் இலத்தீன் அகராதி என்பன தமிழ்நாட்டு வேதியர் தமிழ்மொழியில் புலமை நயம் பெறுவதற்காகத் தந்தளித்த பெரும் களஞ்சியங்கள், தொன்னூல் விளக்கமும் சதுரகராதியும், கொடுந்தமிழுக்கு சான்று கோரும் வகையில் பரமார்த்த குருவின் கதையினையும், செந்தமிழுக்கு எடுத்துக் காட்டாக ''வாமன்'' சரித்திரத்தையும் வரைந்தளித்தார். இவரது தொன்னூல் விளக்கம் இவருக்கு, திருமதுரைச் ''செந்தமிழ்த் தேசிகர்'' எனும் பட்டத்தை தேடித் தந்தது 1781 இல தமிழ்ப் பள்ளியொன்று நடாத்தும் அளவிற்கு முனிவரின் தமிழ் ஈடுபாடு வளர்ந்தோங்கியது.

இளமையிலேயே இத்தாலியம் இலத்தீன் கிரேக்கம், எபிரேயம். பிரெஞ்சு ஆகிய பன்மொழிகளையும் பயின்றார் தமிழகத்திற்கு வரும்போது போர்த்துக்கீசியம், ஆங்கிலம் என்பவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தார். இந்தியாவில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகியவற்றை ஒருங்கே கற்ற வித்தகர். மூன்றே மாதங்களில் பாரசீகம், இந்துஸ்தானி ஆகிய இரு மொழிகளைக் கற்றார். மற்றும் ஸ்பானிய மொழியிலும். மலையாளத்திலும் சிறந்திருந்தார் எனக் காணக் கிடக்கின்றது. இவ்வாறு பதினன்கு மொழிகள் தெரிந்த பண்டிதனைப் பைந்தமிழர் மறக்கவே முடியாது.

மாமுனிவர் மேதா விலாசத்திற்குப் பெரும் புகழ் தேடித்தந்தது, அவர் தந்த தேம்பாவணி பாதங்களில் சிலப்பதிகாரம் எனும் சிலம்பினையும் இடையில மணிமேக்லை எனும் மேகலாபரணத்தையும், மார்பினிலே சீவக சிந்தாமணி எனப்படும் மணிமாலையையும், காதுகளிலே குண்டலகேசி எனப்படும் குண்டலத்தையும கைகளில வளையாபதி எனப்படும் வளையலையும் அணிகளாகக் கொண்டிருந்த தமிழன்னைக்கு எமது இத்தாலியக கம்பன் தேம்பாவணி எனும் காப்பியத்தை வாடாததொன் மலர்மாலை கட்டித் தனக்கென்று ஒரு புது உறவை ஏற்படுத்தி விட்டார்.

''வண்ணம் தொண்ணூறு மறைக்கதைகள் நூற்றைந்தும்
தண்ணந் தமிழ்வல்லான் தந்த அரும் பயன்''

இவ்வாறு தேம்பாவணியில்வண்ணங்கள்செய்தான் இவரது பன்மொழிப் புலமையையும், பன்னூல் ஆட்சியும் பளிச்சிடும் பெட்டகம் தேம்பாவணி' புதுமைகள் புகுத்தி திறங்கள் செய்தான் இந்த வீரமாமுனி, இல்லறத்தில துறவறம் மேற்கொள்ளும் அரிய உண்மையை அழகாக காட்டுகிறார். மகளிர் கற்புத் திறத்தையே வலியுறுத்தி வரும் தமிழிலக்கிய உலகிலே ஆடவர் கற்பு நலத்தை, வற்புறுத்தும் இலக்கியமாக தேமபாவணி திகழ்கிறது.

''தோ பொருள் அறங்கள் நாடிச் செய்த ஆண் துறவியினுாங்கும்,
பேர் பொருள வாழக்கை நாடிப் பெண் துறவு அரியதன்றே?

எனும் கத்தோலிக்க இறையியலைக் கச்சிதமாக எடுத்தாண்டார், பன்னூல் பயிற்சி மிக்க இப்பண்டிதர். பழமை போற்றினார் தேம்பாவணியில் எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோள் களுள் திருக்குறள் ஆட்சி மிக மாட்சியுடன் மிளிர்கின்றது. ''எங்கும் ஒரு விளக்கென நின்றுயர்ந்த திருவள்ளுவர்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

கலைக்காப்பியமான ''தேம்பாவணி''யை யாத்த அவர், நாட்டுப்புறக் காப்பியமான ''சித்தேரி அம்மானை''யை எழுதினார். மக்களிடையே எளிதாகவும் தெளிவாகவும் எடுத்தியம்ப இந்த இலக்கிய அமைப்பைக் கையாண்டுள்ளார். இந்த சுவை நலங்கனிந்த அற்புதச் சிறு பிரபந்தத்தினுல் பைந்தமிழில் மட்டுமல்ல பழகுதமிழாலும் புலமைகளைப் புகுத்தி விட்டார்,

அறக்கருத்துக்களை அழகு தமிழில் அள்ளிவழங்கிய கவிப்பெருந்தகையை காலமெல்லாம் தமிழ் கூறும் நல்லுலகு போற்றும் என்பதற்கு ஐயமில்லை இலக்கிய ஆர்வலர் இனம் கண்ட இந்த இத்தாலியக் கம்பனது, ஆழ்கடல் முத்துக்கள், அன்னை தமிழுலகில் அறிவொளியை அருள் ஒளியை பரப்பிக் கொண்டே இருக்கும்.

''தித்திக்கும் தமிழ்த்தேனை
எத்திக்கும் ஈர்ந்திட்ட
முத்தமிழில் மொழி வல்லன்
பத்திக்குப் பாவலன்
கத்தோலிக்கம் தந்த இத்தாலியக்கம்பன்
வித்தகன் புலவர் கோ. வீரமாமுனிவனே''

# தமிழ் வளர்த்த

# தனிநாயகம் அடிகள்

தமிழன்னைக்கு இலக்கணங்களை புனைந்து அழகு செய்தனர் புலவர்கள் பலர் பேரிலக்கியங்களை எழுதி அவளது கன்னித் தன்மைக்கு அழியாத பாதுகாப்பை அளித்தனர் அறிஞர்கள் நாவல்களையும், சிறு கதைகளையும், உரை நூல்களையும் எழுதி அவளை வளம்படுத்தியோர் பலராவர் தமிழியல் ஆய்விலும் ஒப்பியல் ஆய்விலும் ஈடுபட்டவர்கள் ஒரு சிலரே இவர்களில் ஒருவரே தமிழ் வளர்த்த தனிநாயகம் அடிகள் ஆவார். இதனையே, ''கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தமிழன்னைக்காகப் பாடுபட்டவர்களால் தனிநாயகம் அடிகளை மிஞ்சக் கூடியோர் எவருமில்லை'' என பேராசிரியர் குலேந்திரன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஈழநாட்டிலும் தமிழகத்திலும் தனிநாயகம் அடிகளாரிலும் பார்க்க தமிழை நன்கு கற்ற அறிஞர்கள் இருக்கின்றார்கள் என்பதில் ஐயமில்லை ஆயினும் அவருக்கு இணையான இன்னொருவரைக் கண்டுகொள்வது கேள்விக்குறியாகவே இருக்கிறது அதற்கு காரணமாய் அமைவது அவர் தமிழ் மேல் கொண்ட பற்றே என்றால் மிகையாகாது அடிகளார் ஓர் பேராசிரியர், சமய குரு ஆராய்ச்சியாளர் உயர்ந்த இடத்தை அளிக்கும் அன்பான நட்பாளன்.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக் தமிழ் செய்யுமாறே''

என்ற திருமூலரின் வாக்கிற்கு சிந்தையை பறிகொடுத்தவர்

உரோமாபுரியில் சமய உயர் கல்வி பயின்றபோது வீரமாமுனிவர் கழகத்தை நிறுவி தமிழோசை செய்தவர் தனிநாயகம் அடிகள் தூத்துக்குடியில் சமயத் துறவியாக பணிபுரிந்த அவரை அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கல்விபயில ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர் ஆயர் ரேச் ஆண்டகை ஆவார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டங்களையும் பதவிகளையும் பெற்றபோது தமிழன்னையின் பொன்னிறமான சாயல் அவர் உள்ளத்தில் பூங்குழல் ஊதியது ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும் என்ன நோக்கத்துடன் தமிழ் நூல்களை வெளியிட்டார்.

அடிகளார் தனது அயரா முயற்சியால் தமிழ், ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு உட்பட ஏறத்தாழ பதினாறு மொழிகளை அறிந்திருந்தார் இதனால் இவருக்கு தமிழிற் கருத்துக் குவியல்களை பிறமொழி கருத்துச் செல்வங்களோடு ஒப்புநோக்குவது இலகுவாயிற்று

யாழ்ப்பாணத்தில் 1951-இல் நடைபெற்ற தமிழ் விழாவில் இவரது பேச்சில் பன்மொழி ஞானம் புலனாயிற்று ''ஆங்கிலம் வர்த்தகத்தின் மொழி என்றும் கிரேக்கம் இசையின் மொழி என்றும் பிரெஞ்சு தூதின் மொழி என்றும் கூறுவது எவ்வாறு பொருந்துமோ அதைப்போலவே தமிழை இரக்கத்தின் மொழி பக்தியின் மொழி எனக் கூறுவது பொருந்தும்'' என இவர் தனது பேச்சில் குறிப்பிட்டார்

அடிகளார் செல்லும் இடங்களில் வாழும் மக்கள் தமிழ் இடத்தும் தமிழ் பண்பாட்டிலும் ஊக்கம் கொள்ள அத்திவாரமிட்டார் ''யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது சிந்தனையில் பூத்த செந்தாமரையாகும்

தனிநாயகம் அடிகள் கனடா, அமெரிக்கா, மலேசியா, மேற்கிந்திய தீவுகள் பலவற்றிற்கும் சென்று தமிழ்த்தொண்டு செய்தார் இதனால் இவரது அன்பர்கள் இவரை 'தமிழ் தூதர் தனிநாயகம் அடிகள்'' என அழைக்கலாயினர் மேலும் தமிழ் தூது என்ற நூலை எழுதியமையால் இப்பெயர் பெற்றார் எனக் கூறுவதும் பொருத்தும்

உலகிலுள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு சென்று தமிழின் சிறப்பு பற்றி சொற்பொழிவு ஆற்றியுள்ளார் அந்தநாளில் உலகிலுள்ள பல்கலைக்கழங்களில் இந்திய கல்வி (Indian Studies) என்றால் சமஸ்கிருதம் பற்றிய அறிவினையே குறிக்கும் தமிழ் இடம் பெறவில்லை. அடிகளாரது அயராத முயற்சியால் தமிழ் மொழி இடம் பெறலாயிற்று

தனிநாயகம் அடிகள் ஒன்றே உலகம், தமிழ் தூது என்ற இரு நூல்களை இரு நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ளார்

தமிழ் நாட்டில் பெயரளவில் கேள்விப்பட்டு இதுவரை மறைந்திருந்த தம்பிரான் வணக்கம் போர்த்துக்கேயர் தமிழ் அகராதி என்பவற்றை கண்டறிந்து அவற்றை அச்பேற்றினார் வத்திக்கான் நூற்கூடத்தை ஆராய்ந்து திருத்தொண்டர், திருமூலர் எனும் நூல்களை பதிப்பித்தார் உலகில் முதன் முதலாக 1554-இல் அச்சேறிய முதலாவது தமிழ் நூல் போர்த்துகேய அரும் பொருட்காட்சி சாலையில் இருப்பதையும் அதே காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட தமிழ் நூல் ஒன்று கையெழுத்துப் பிரதியாகவே இருப்பதையும் அறிவித்தார்

மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் 1964–இல் அவர் இந்திய இயல் பகுதியில் ஆராய்ச்சியாளராய் இருந்தார் அப்போது இந்தியாவின் தலைநகரில் கலைப்பண்பாட்டியல் ஆய் வாளர்களின் 22-வது மாநாடு நடைபெற்றது உலகின் பல பகுதிகளிலிருந்து தமிழ் ஆர்வம் கொண்டவர்களும் தமிழ் பயிற்சியுடைய பிற மொழி அறிஞர்களும் அங்கே கூடினார்கள் தமிழகத்துப் பேராசிரியர்கள் உலக தமிழ் அறிஞர்கள் பலர் தில்லி நகரில் கூடியிருந்த வேளையில் உலகு தழுவிய தமிழமைப்பு ஒன்றை உருவாக்க அடிகளார் முனைந்தார் இதன் பயனாக ஒரே நாளில் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் உருவாகிறது அடிகளார் தனிநாயகமே அதன் செயலாளர் நாயகமாய் பெறுப்பேற்றார்

1966–ம் ஆண்டில் மலேசியாவின் தலைநகரில் உலகளாவிய தமிழாராய்சி மகாநாட்டை வெகு சிறப்பாக நடத்தி முடித்தார் ''தமிழன் குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருப்பவன்'' என்ற பழிச் சொல்லை துடைத்தெறிந்தார். மேலும் தமிழன் உலகரங்கில் தனது பெருமையை நிலைநாட்டவல்லவன் என்ற பெருமையையும் ஏற்படுத்தி கொடுத்தார். 1974–இல் யாழ்ப்பாணத்தில் அரசியல் தலைவர்களினதும் பெரும் புள்ளிகளினதும் எதிர்ப்பையும் தாண்டி தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தி முடித்தார்

தமிழியல்ஆய்வில் ஈடுபட மொழி தடையாய் இராது என்பதை இவர் தனது செயலில் காட்டினார் இதற்கு வேண்டியது ஆர்வமே என்றும் குறிப்பிட்டார்.

தனிநாயகம் அடிகள் தாம் வாழ்ந்தவரை தமிழிற்கே தனது வாழ்வை அர்ப்பணித்தார் இவரது தமிழ்த் தொண்டை நாம் எத்தகையதோர் சந்தர்ப்பத்திலும் மறந்துவிட முடியாது.

''தமிழன் உள்ளவரை தமிழ் மறையாது!
தமிழ் உள்ளவரை தனிநாயகம் அடிகளாரின் தமிழித் தொண்டும் அவர்தம் நாமும் மறையாது!

செல்வி டி. ஜெயதேவி

# என் அம்மா

உலகிலேயே தேடமுடியாத ஒரு உறவு அம்மாதான். எங்குமே பெறமுடியாத அன்பை நாம் அம்மாவிடம் தான் பெறுகிறோம். தன் உதிரத்தையே பாலாக ஊட்டி ஒரு குழந்தையை வளர்க்கிறாள். பிள்ளையின் சுகமே தன் சுகமெனக் கருதி அல்லும் பகலும் பாடுபடுகிறார். பெற்றபொழுதிலிருந்து கடைசி வரைக்கும் அம்மாதான் எனக்கு துணை நிற்கிறார். நான் காலையில் எழுந்து பாடசாலைக்கு செல்வதற்கான வேலைகளில் எனக்கு உதவிபுரிகிறார். என் உடைகளைத் துவைத்து, எனக்கு உணவு தயாரித்து தலை சீவிவிட்டு முகம் கழுவி சப்பாத்து அணிவித்து நகம் வெட்டி குளிப்பாட்டி எல்லா வேலைகளையும் அம்மாதான் செய்வார். அது மட்டுமல்ல நான் பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்த பின்பு எனக்கு பாடங்கள் சொல்லிக் கொடுப்பார். எனக்கு ஒரு அண்ணாவும், ஒரு தங்கையும் இருக்கிறார்கள் அம்மா எனக்கு செய்யும் வேலைகள் போல் அவர்களுக்கும் உதவிகள் செய்வார். அதுபோன்று பாட்டுப்பாடவும், நாட்டியம் ஆடவும், கட்டுரை எழுதவும் உதவி செய்வார் எனவே அம்மாவை நான் மறக்க மாட்டேன்.

செல்வி பி. குமுதினி

செல்வி இராஜநந்தினி
இலக்ஷ்மணப்பெருமாள்

# தமிழும் கலையும்

''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றியது மூத்த தமிழ்'' என்னும் வாசகம் தமிழின் தொன்மையையும், அதன் பெருமையையும் தொக்கி நிற்கின்றது. தமிழ் என்றால் இனிமை; அந்த இனிமையான ''தமிழிற்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கும் நேர்'' என்று மிக அழகாக தமிழை நம் உயிரிற்கும் மேலாக உவமானம் சொல்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து எழில் மணம் வீசும் அமிழ்தினும் இனிய எம் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு ஈடு இணைதான் ஏது? இவ்வளவு தேனினும் இனிய தமிழுடன் ஈருடல் ஒருயிர் போன்று இரண்டறக் கலந்தது அழகியற் கலைகளாகும். இக் கலைகளே தமிழின், தமிழரின் பண்பாட்டை நாகரீகத்தை உலகறியச் செய்கின்றன. ஆய கலைகளாம் அறுபத்து நான்கு கலைகள். இவ் அறுபத்து நாண்கு கலைகளிலே சிறந்து விளங்குவது இயல், இசை நாடகம் என்னும் முக் கலைகளாகும். இச் சிறந்த கலைகள் மூலம் மனிதன் தன் துன்ப நிலை மறந்து இன்பம் அடைகின்றான்.

இதில் நாம் பரதக் கலையைப் பற்றி சிறிது விரிவாக ஆராய்வோம் பரதச் கலையின் நாயகன் அந்த ஆடலரசன் நடராஜ பெருமான் ஆவார். நிருத்தம், நிருத்யம், நாட்டியம் இம்மூன்றுமே பரத நாட்டியத்தின் பிரிவுகளாகும். இதில் தாளக்கட்டுப்பாட்டிற்குள் அடங்கி கருத்தைப்கும் புலப்படுத்தாத சாதாரண நடனம் நிருத்தம் எனவும். தாளக்கட்டுப்பாட்டிற்குள் அடங்கி கருத்தைப் புலப்படுத்துவது நிருத்யம் எனவும் இவை இரண்டும் சேர்ந்தது நாட்டியம் எனவும் அழைக்கப்படுகின்றது.

ப – மனதினுள் உண்டாகும் உணர்ச்சிகளை முகத்தின் மூலம் காட்டும் பாவமாகவும் ர — ஏழு ஸ்வரங்களான ஸ. ரி க. ம. ப. த. நி சேர்ந்து காதிற்கு இனிமை கொடுக்கும் ராகமாவுகம், த — தாளங்கள் ஏழு வகைப்படும். இதில் ஒவ்வொரு ராகமும் ஒவ்வொரு தாளத்தில் அமைந்து, தாளமாகவும் பரத முனிவர் மூலம் உலகிற்கு அறிமுகம் செய்யப் பட்டமையாலும் பாரத நாட்டில் தோன்றியதாலும் ''பரத நாட்டியம்'' என்னும் இனிமையான பெயரைப் பெறுகின்றது.

இப் பரத நாட்டியம் திரேதாயுகத்தில் மக்கள் அதிக துயரத்தில் மூழ்கி இருந்தார்கள். இத் துன்ப நிலை மாறி இன்பம் பெற வேண்டுமென தேவர்களுக்கு அதிபதியான தெய்வேந்திரன் படைத்தலின் ஆதி தெய்வமான பிரம்மனிடம் கேட்டுக்கொண்டான். அவனின் வேண்டுதலுக்கு இணங்கி பிரம்மா நால் வேதமாகிய இருக்கு யசுர், சாமம், அதர்வணம் ஆகியவற்றிலிருந்து முறையே நாட்டியம் அபிநயம், கீதம் நவரசம்; ஆகிய அம்சங்களை எடுத்து அழகான இப் பரத நாட்டியத்தை ஐந்தாவது வேதமாகப் படைத்தார். பின் பரத முனிவரிடம் உலகெங்கும் பரப்பும்படி ஆணையிட்டார். பரத முனிவரும் தேவலோக வாசிகளான கந்தர்வ ஸ்திரிகளுக்கு பயிற்றுவித்து சிவபெருமான் உமாதேவியார் முன்னிலையில் கைலை மலையில் அரங்கேற்றினார்.

இதனால் பெரிதும் மகிழ்ந்த சிவபெருமான் தன்னுடைய இஷ்ட நாட்டியமான தாண்டவத்தை பரத முனிவருக்கு கற்பிக்கும்படி தன்னுடைய கணங்களில் முதலான தண்டு முனிவருக்கு கட்டளை இட்டார். இத் தாண்டவமானது கடின அடவுகளைக் கொண்டது வீராவேசமாக ஆடப்பட வேண்டிய நடனமாகும். இது பொதுவாக வீரம் நிறைந்த ஆண்களுக்கே உரியது. ஆனால் தற்காலத்தில் பெண்களும் பங்கு பற்றுகின்றார்கள்.

இதே போல் பார்வதி தேவியாரும் தன்னுடைய இஷ்ட நடனமான லாஸ்யத்தை தன்னுடைய தோழியான உஷை மூலம் உலகிற்கு அறிமுகப்படுத்தினார். லாஸ்யம் மென்மையானது, கோமளமான பெண்களுக்குரியது. தாண்டவத்திற்கும் லாஸ்யத்திற்கும் தனித்தனியான அடவுகள்

எதுவுமே இல்லை. கையாளப்படும் முறையிலே தான் தாண்டவம், லாஸ்யம் எனப் பிரிக்கப்படுகின்றது. நளினமாகவும், மென்மையாகவும் செய்வதன் மூலம் லாஸ்யமாகவும், கடினமாகவும் வீரமாகவும் செய்வதன் மூலம் தாண்டவமாகவும் பெயர் பெறுகின்றது.

இவ்வாறு உருவாகிய இவ் அற்புதக் கலை அந்நியர் ஆட்சியில் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது. நாம் சுதந்திரமடைந்த பின் புதைக்கப்பட்ட நம் அரும் பெரும் செல்வங்கள் சிறிது சிறிதாக வளர்ந்து இன்று ஆலமரம் போல் பல விழுதுகளுடன் நிமிர்ந்து நிற்கின்றன.

நாட்டிய மறுமலர்ச்சியில் நாம் மறக்கமுடியாதவர்கள் தஞ்சை நால்வர்களான பொன்னையா சின்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகியவர்களாவர். இவர்களில் பொன்னையா என்பவரே நாட்டியக் கச்சேரிக்கு ஒழுங்கு முறை அமைத்தவராவர்.

அந் த நாட்களில் கோயில்களில் தேவதாசிகளால் மட்டுமே ஆடப்புட்டு வந்த இப் பரத நாட்டியம் இன்று பல குடும்பப் பெண்கள் பங்கேற்கும் அளவிற்கு முன்னேறியுள்ளது. இதற்கு காரணகர்த்தாவாகிய ஸ்ரீமதி ருக்மணி அருண்டேலை நாம் அவ்வளவு சீக்கிரத்தில் மறந்து விட முடியாது சென்னை அடையாறில் கலாஷேத்திரம் என்னும் நாட்டியப் பள்ளியை நிறுவி அந்நாட்களில் கிளம்பிய பலத்த எதிர்ப்புகளுக்குமத்தியில் மேடையேறி பல நிகழ்ச்சிகளை அரங்கேற்றியதன் மூலம் ஒரு புரட்சியையே செய்தார். அவர் செய்த இம் மாபெரும் புரட்சியின் பயனாக இன்று வீட்டிற்கு வீடு சலங்கை ஒலி கேட்டுக் கொண்டிருக்கின்றது.

---


*WITH BEST COMPLIMENTS FROM*

நீதியும் சுதந்திரமும் நெருங்கியிருக்க வேண்டும்
இரண்டுக்கும் இடையே பிரிவினை ஏற்பட்டால்
ஒன்றும் வாழாது. — எட்மண்ட் பாக்

# NEW COMMERCEAL COMPANY

*General Merchants*
*Dealers in Forage, Agro Chemicals Poultry Foods Hardware*
*& Estate Suppliers*

No. 102, Main Street,
BANDARAWELA.

T. P. 057-2819

# எங்கே ஓடுகிறாள்?

அதோ ஓடுகிறாளே அவள்தான்...... என்ன ஆரம்பித்தவுடனேயே புரியாமல் ஆரம்பிக்கிறாளே என்று திகைக்கிறீர்களா? சரி புரியும்படியாகவே ஆரம்பிக்கின்றேன்.

அவள் பெயர்தான் மலர்விழி. பெயருக்கேற்றபடி அழகிய மலர்போன்ற விழிகள். ஆனால் மூக்கு, புருவம், கை என்று வர்ணிக்கத்தொடங்கினால், கதாசிரியர்களின் சொற்படி 'வார்த்தைகள் போதாது'. ஆனால் இவையனைத்தும் அவளின் இளமைக் காலத்தோற்றம்.

சரி நிகழ்காலத்திற்கு வருவோம். மலர்விழியின் முகத்தில் நிறைய சுருக்கங்கள். அவை முதிர்ச்சியால் வந்தவையா அல்லது ஏக்கத்தின் சாயலா? காலம் பதில் கூறுமா? வீட்டின் கூரையைப் பார்த்தவாறே அடிக்கொருமுறை தனது வேதனையை பெருமூச்சு மூலம் வெளிப்படுத்தியது அவளது நெஞ்சு விம்மித் தாழ்வதின் மூலம் தெரிகிறது. அவளின் மனம் இறந்தகால நிகழ்ச்சிகளில் ஒன்றியிருந்தது.

அக்காலத்திலே அந்தக் கிராமத்திலேயே சிறந்த அழகிய பெண்ணாக, சிறந்த குணங்கள் அனைத்தையும் கொண்ட நிறைகுடமாக வளைய வந்தவள் அவள். கண் எச்சில் படக்கூடாது என்றோ அல்லது தன் சிருஷ்டியைப் பார்த்து தானே மயங்கிவிடுவேனோ என்ற பயத்தினால் தானோ என்னவோ பிரமன் அவளை சிறிது கறுப்பாகப் படைத்துவிட்டான். இளம் பெண்ணுக்கேயுரிய நாணத்துடன் கூடிய துள்ளலுடன் இன்னும் கொஞ்சகாலம் அவள் சுற்றிதிரிந்திருக்கலாம். ஆனால் அக்காலத்திலே அவளது சுதந்திரத்திற்குக் கட்டுப்போடுமுகமாக அவளுக்குக் கால்கட்டு என்ற பெயரிலே அவளை ஒருவனுக்கு தாரைவார்த்தார்கள். அவளுக்கு வந்த கணவனோ அவளது ஒழுக்கத்திற்கு மேலும் புகழ் சேர்ப்பவனாக அமைந்திருந்தான். எவ்வளவு மகிழ்ச்சியான காலம்! இவற்றையெல்லாம் அனுபவிப்பதற்குத்தான் இறைவன் அத்தகைய இன்பத்தைக் கொடுத்தானோ?

ஆண் சிங்கங்கள் என்று போற்றும் வகையில் இரண்டு பிள்ளைச் செல்வங்கள். இவ்வளவிற்கும் அவள் பெரிய வீட்டுப்பிள்ளையல்ல. சாதாரண கொழுந்து பறிக்கும் பெண். அவளை பார்த்து வயிறெறியாதவர்கள் அக்கிராமத்தில் குறைவு.

இவ்வாறாக அவளின் வாழ்க்கைப்படகு கணவன் என்ற படகினாலும், பிள்ளைச் செல்வங்கள் என்ற துடுப்பினாலும் அமைதியாக ஓடிக்கொண்டிருந்த பொழுதுதான் காலன் உருவில் வந்தான் பொலிஸ்காரன். 'அமமா யாரும் இல்லையா வீட்டில?' என்ற குரல் கேட்டதும் திடீரென்று சுயநினைவிற்கு வந்த மலர் குரல் வந்த திக்கை நோக்குகிறாள். அங்கே எதிர் வீட்டு ஃபாரிஸா வந்தவளை அனுப்பியதும் மீண்டும் கணவனின் நினைவுகள் அவளைக் கவ்விக் கொள்கின்றன.

காரணம் ஒன்றும் அறியாமலே அல்லது அறிவிக்காமலே கணவன் காணாமல் போனான். நாட்டு நிலைமைகளின் படியும், ஊரார் கதைத்துக்கொள்வதின் படியும் ஊகித்து இப்படித்தான் நடந்திருக்கவேண்டும் என்று தீர்மானித்த பின் வந்த சோதனைகளோ பற்பல 'மாதராய்ப் பிறந்திடவே மா தவம் செய்திடல் வேண்டுமம்மா' அவளின் விடயத்தில் அது பொய்த்தும் போனது ஏனோ? அம்மாவின் நிலையறிந்து பிள்ளைகள் ஆளுக்கொரு பக்கமாக நின்று தேற்றும் போது தான் அநாதை இல்லை என்ற உணர்வு அவளை சமாதானமடையச்செய்தது.

கணவன் வந்தான். வந்தவனை நினைத்து சிரிப்பதா அல்லது வந்திருப்பவனின் கோலத்தைப் பார்த்து அழுவதா? அப்போதுதான் கதவை அவசரமாக மூடிக்கொண்டு சொன்னான், 'மலர், நான் சிறையிலிருந்து தப்பி ஓடிவந்தேன். அங்கு என்னால் அனுபவிக்க முடியாத துன்பங்கள், வேதனைகளை சித்திரவதை மூலம் அனுபவித்து விட்டேன். என்ன நிலையில் இருப்

பாயோ என்று காண ஓடோடி வந்தேன். எனது சொந்த மனைவியைக் காணும் நிலை இதுவா? என்ன செய்வேன்?' நிரபராதி என்று நிரூபிக்க முடியாததால் கையாலாகத்தனத்துடன் அழுதான். குடும்ப தலைவியே கலங்கியிருக்கும்போது தலைவனைத் தேற்ற வார்த்தை ஏது?

பேசாமடந்தையாக் இடியொன்று தலையில் விழுந்ததுபோல் இருந்தவளிடம் விடைபெற்று ஓடினான். மறுநிமிடமே வாசலில் போலிஸ் வண்டி, பற்பல விசாரணைகள், எல்லாம் முடிந்து போனபோது, 'பட்டகாலிலே படும்' என்பதுபோல பத்தொன்பது, பதினெட்டு வயதே நிரம்பிய அவளது பிள்ளைகள் அடுத்தடுத்துக் காணாமல் போயினர். ஆண் சிங்கம் இரண்டு என்று மலைபோல் நம்பியிருந்த பிள்ளைகள் இரண்டுமே தந்தை வழியில் போயினவோ என்று எண்ணி குமுறி அழும் இதயத்துடன் தேற்றுவதற்குக்கூட ஆளில்லாமல் அனாதைபோல் அவள் என்ன தான் செய்வாள்? ஒவ்வொரு முறையும் போலிஸ் வண்டி வரும்பொழுது ஓடிச்சென்று பார்த்து ஏமாந்து, கண்களில் நீர் வடிய வீடு திரும்பும்போது அயல் வீட்டுப் பெண்களும் அனுதாபப் படுவர்.

இதோ இப்பொழுதும் அவள் ஓடிக்கொண்டிருந்தாள். கணவனையும், பிள்ளைகளயும் எதிர் பார்த்து சோர்ந்துவிடவில்லை. வருவார்கள் என எதிர்பார்த்துக்கொண்டே ஒரு மலர் வாடுகின்றது. அவள் கண்களில் துளிர்ந்த கண்ணீர் கன்னங்களில் வழிந்தோடி சீலையை நனைக்கிறது. கண்ணீருக்குத்தான் ஏது முடிவு?

சட்டென்று யோசனையிலிருந்து விடுப்பட்டாள். சுதந்திர தினத்தை முன்னிட்டு நிறைய பேரை விடுவித்திருக்கிறார்களாம். யாரோ சொல்லிக்கொண்டு போனார்கள் திடீரென்று மூளையில் பொறிதட்டியது இன்று சுதந்திர தினமல்லவா? அவளின் நினைவை மெய்பிக்கவே வந்தது போல வந்தது ஒரு பொலிஸ் வண்டி. வாழக்கையில் ஓடி ஓடியே பழக்கப்பட்டவள் இப்பொழுதும் ஓடுகிறாள். கண்ணீரைத் துடைத்துக்கொண்டே ஓடுகிறாள். அது தற்காலிகமா அல்லது நிரந்தரமா?

எதிர்பார்ப்புகளுடனும் அளவிலா ஆர்வத்துடனும் அதோ அவள் ஓடுகிறாள்.

**செல்வி என். ஜெகயாழினி**

## வாய்மையின் வெற்றி

பண்பாடு கலாசாரம் என்று அழைக்கப்படும் உயர்ந்த பண்பு ஒருவரிடம் அமைய வேண்டுமானால், அவர் வாய்மையைத் தமது குறிக்கோளாக்க் கொள்வது அவசியமாகும். வாய்மையே வெற்றி என்பது ஓர் உயர்ந்த பொன்மொழி அதுவே சிறுவராகிய எமக்கு தாரக மந்திரம். இதனால் இதை மறக்கக்கூடாது உயிர் போவதாயினும் வாய்மையில் தவறுதல் கூடாது. வாய்மை பேசத்துணிவில்லாமல் பொய் பேசுபவன் உடனடியாகத் தனக்கு வரும் ஆபத்திலிருந்து தப்பிக்கொள்ளலாம் அன்று, பொய் சொன்னகாலத்தில் ஏற்பட்ட நன்மையைவிட பல்லாயிரம் மடங்கு தீமையை அந்தப்பொய் உண்டாக்கிவிடும். ஆனால் வாய்மை தவறுதல் கூடாது. வாய்மையை விளக்க பின்வரும் கதை இது.


முன்னொரு காலத்தில் இரண்டு பேர் வேலை தேடிக்கொண்டு அயலூருக்குச் சென்றார்கள். அங்கு வேலை கிடைக்காமல் ஒரு வீட்டில் களவெடுக்கச் சென்றார்கள். அங்கு சென்றவர்களில் ஒருவன் வெளியே நின்றான். மற்றவன் பரணியில் ஏறி இருந்தான். நள்ளிரவு ஆகியது அங்கு உண்மையாகவே திருடன் வந்துவிட்டான். வந்த திருடன் வீட்டுக்காரரைக் கொலை செய்ய முயற்சித்தான. அப்பொழுது பரணில் இருந்தவன் குதித்து வீட்டுக்காரரை காப்பாற்றினான். அப்பொழுது வீட்டுக்காரர் அவனிடம் 'நீ எப்படி இங்கு நுழைந்தாய்' என்று கூற, அவனோ தன் நிலையை விபரமாகக் கூறினான். அத்துடன் வீட்டுக்காரனிடம் இனிமேல் இப்படியான திருட்டு வேலைகளில் தான் ஈடுபட மாட்டேன் என்றும் வாக்குப் பண்ணினான். வீட்டுக்காரரும் அவனை மன்னித்து தன் வீட்டில் அவனுக்கு வேலை கொடுத்தார். பின்பு அவன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான். இப்படியாக நாமும் வாய்மை பேசி, இவ்வுலகத்தில் நல்லவர்களாக வாழ்வோமாக, வாய்மை நிறைந்து வளர்க எம் சமுதாயம்.

செல்வி ஜி. சுபாஷி

மலர்க் குழு



"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்"



ஆடல் வகுப்பின் ஆரம்பம் காணீரோ



கோலெடுத்து ஆடுகின்ற கோலமென்ன கோலம் — இவர் கோலமென்ன கோலம்



பலூன் ஊதும் ஆசிரியர்களுக்கு பாலர் என்ற பழைய நினைப்போ



இலவச புத்தக விநியோக விழாவிலே எமது வித்தியாலய மாணவி மேதகு ஜனாதிபதியிடமிருந்து புத்தகம் பெற்றுக்கொள்கிறார்




ஆடுவதும் பாடுவதும் காசுக்கல்ல — கலைக்கு!



நாடும் வீடும் நலம்பெற — நாளும் இறைவனை வேண்டுவோம்.



வண்ணச் சோலை வந்துலவும் வண்ணச் சிட்டுகள்



தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு உடையுண்டு

கே. இரத்தினசபாபதி B.Sc.
ஆசிரியர் ப/பண்டாரவளை
தமிழ் மகா வித்தியாலயம்.

# தமிழ் எழுத்து வடிவங்களில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட சீராக்கம்

தமிழ் மொழியின் எழுத்து வடிவங்களில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி அறிவது நல்லதொரு முயற்சியாகும். தமிழ் மொழியில் எழுத்து சீராக்கம் செய்யப்பட்டு தற்போது புதிய வடிவங்கள் கையாளப்பட்டு வருவது காலத்தோடு ஒட்டிய முன்னேற்றமான ஒரு நடைமுறையெனக் கூறலாம்.

பாரிஸில் தொடங்கி மொரீசியஸ்வரை பல தமிழாராய்ச்சி மகாநாடுகள் நடைபெற்றுள்ளன. இம்மகாநாட்டில் நடைபெற்ற ஆய்வுகளின் அடிப்படையில் எழுத்து சீராக்கம் செய்யப்பட வேண்டும் என தமிழ் பற்றுடைய நெஞ்சங்கள் எடுத்த முடிவு வரவேற்கத்தக்கதொன்றாகும். மாற்றங்களைச் செய்வதோடு அல்லாமல் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் அவ் அறிஞர்களும், தமிழுலகும் தீவிர பங்கு கொள்வது முக்கிய விடயமாகும். 'ஏட்டுச்சுரைக் காய் கறிக்குத வாது' என்பது போல எழுத்து வடிவ மாற்றம் இருந்துவிடாது அம்மாற்றங்களை நடைமுறைச் சாத்தியமான செயலிருவில் வெளிக்கொணர்ந்து தமிழுலகம் முழுவதும் பயன்பெறும் வண்ணம் செய்தலே சாலச் சிறந்தது.

இலக்கண வளங்கொழிக்கும் தமிழ் எழுத்துக்களின் வரி வடிவமாற்றம் இன்று நேற்று ஏற்பட்டதொன்றல்ல; அது பல சகாப்தங்களுக்கு முன் ஆரம்பமானதொன்றாகும். ஒவ்வொரு சகாப்தத்திலும் பல்வேறு சீர்திருத்தங்களுக்கு உட்பட்டாலும் தனது 'கன்னித் தன்மையை இழந்து விடாத செம்மொழி நமது தமிழ்மொழி. புதிய புதிய மொழிகள் எல்லாம் தோன்றி அவற்றிற்கான நவீன எழுத்து வடிவங்களை உருவாக்கிக்கொண்டிருந்த காலகட்டத்தில், அதி பழைமையான தமிழ் எழுத்து வடிவங்களையும் சீர்படுத்த வேண்டிய காலத்தின் கட்டாயம் அன்றே அரும்பி விட்டது. இவ்வெழுத்து சீராக்கத்தை தமிழுலகும் தமிழறிஞர்களும் ஏன் வரவேற்கிறார்கள்? இப்படியான ஒரு மொழிப் புரட்சி ஏற்படவேண்டும் என்ற நிலைப்பாடு நம்மிடையே ஏற்படுவதற்கான காரணம் என்ன? என்றெல்லாம் எண்ணும்போது 26 எழுத்துக்களால் உலகத்தையேஆளும் ஆங்கிலம் போன்று தமிழ் எழுத்துக்களையும் ஏன் ஆக்கமுடியாது, அவ்வாறு தமிழும் உலகமொழியாக ஏன் மாறக்கூடாது என்ற நியாயமான வினாவும் எழத்தான் செய்கிறது. இவற்றுக்கெல்லாம் விடை காண விழையும் நம் தமிழ்நெஞ்சங்களின் மொழிப் புரட்சியினை தமிழுலகம் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் எழுத்து வடிவமாற்றங்களை ஒரு சகாப்தத்திலேயே ஏற்படுத்தி முழுமையான முற்றிலும் மாற்றியமைக்கப்பட்ட இலக்கணநெறி குன்றாத தீந்தமிழாக உருவாக்க தமிழ் அறிஞர்கள் முயன்றது உண்மை. அதற்காக பல்வேறு கோணங்களில் மொழியை ஆராய்ந்து இலக்கண பிழையின்றி வரிவடிவ மாற்றங்களை ஏற்படுத்த முயன்றதும் உண்டு. ஆனால் பல்வேறு காரணங்கள் இவர்களின் முயற்சிக்கு தடையாக அமைந்திருந்தன. அவைகளில்

1. பாரிய எழுத்து மாற்றங்களை மொழியின் ஆக்கும்போது தமிழ் மக்களை அது வெகுவாகப் பாதிக்கும் என்ற ஆதங்கம்.

2. மொழித்திறனில் தேர்ச்சி மிக்க மக்கள் தொகையின் குறைவும், அதில் அவர்களின் குறைவான நாட்டமும்.

3. தமிழ் எழுத்து மாற்றங்களை ஆரம்பகாலத்தில் ஏற்படுத்தமுடியாதவாறு பிரசுரங்கள் மற்றும் ஏடுகள், அச்சு இயந்திரங்கள் போதியளவு இல்லாமை

4. தமிழறிஞர்கள் ஒன்றுகூடி வாதப்பிரதிவாதங்களை மட்டும் நடாத்திக்கொண்டு வெறுமனே காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தமை என்பன சிலவாகும்

இத்தகைய தடைகளும் தடங்கல்களும் தம் தாய்மொழி வரிவடிவ மாற்றங்களை பல சகாப்தங்களுக்கு இழுத்துச் சென்றாலும் அது தற்போது நன்மை பயக்க கூடியவாறு சீர்செய்யப்பட்டுள்ளதை காணக் கூடியதாய் உள்ளது முக்கியமாக காலத்தின் அமைவுக்கு ஏற்ப எழுத்துச் சீர்திருத்தம் சிறுக்ச் சிறுக செய்யப்படுவது நன்மை பயக்கும் ஒன்றாகும்.

ஆரம்பத்தில் ஓரளவு சீர்பெற்றிருந்த தமிழ் எழுத்து வடிவம் சுமார் 160 வருடங்களுக்கு முன்னர் தமிழகத்தில் வாழ்ந்த புலமைசால் தமிழறிஞர் வீரமாமுனிவர் என்னும் பெஸ்கிபாதிரியாரினால் நவீன அச்சுப்பொறிகளின் உதவிகொண்டு பிழையுற உச்சரித்துக் கொண்டிருக்கும் மயக்க நிலையை தவிர்க்கவும், குறில் நெடில் எழுத்துக்களின் கடுமையை கணிசமான வளவு தீர்த்து வைக்கவும் முடிந்தது. அவரது காலத்திற்கு முன் 'எ' எழுத்தின் மேல் புள்ளியிடல் குறிலாகவும் புள்ளியின்றி வருவது நெடிலாகவும் கொள்ளப்பட்டது. அவரது திருத்தத்தின் பயனாக 'எ' 'ஏ' புதிய மாறுதல் கிடைத்தது. இவ்வாறு ஏனைய எழுத்துக்களும் மாறுதல் அடைந்தன. இவரை தொடர்ந்து பின்னொரு சகாப்தத்தில் தமிழ் நாட்டில் தோன்றிய புதிய திராவிடர் பாரம்பரியம் தமிழ் வரிவடிவத்தில் மேலும் மாற்றம் செய்யப்படவேண்டும் என்ற நோக்கம் கொண்டிருக்தது. அவ்வேளையில் பகுத்தறிவு தந்தையென போற்றப்படும் திரு. ஈ.வே. ராமசாமி அவர்கள் சில எழுத்துக்களின் சீர்திருத்தத்தை துணிவுடன் தனது ஏட்டின் வாயிலாகவும், பிரசுரங்கள் மூலமாகவும் அறிமுகப்படுத்தினார். இதனால் க கா உ, ஊ, து தூ, போன்ற எழுத்துக்கள் பெறப்பட்டன, மேலும் சில அறிஞர்கள் தி, மி போன்ற எழுத்துக்களும் அமைப்பை மாற்றி எழுதப்படவேண்டும் என்ற எண்ணமுடையராய் இருந்தனர்.

தமிழ் மொழியில் வரி வடிவ மாற்றங்கள் மட்டுமல்ல எழுத்து சிக்கனமும் ஏற்படுத்தப்படலாம் என்ற தோற்றப்பாடு கவிஞர் பாரதிதாசனின் உள்ளத்தில் உருவாகியது சுப்பிரமணிய பாரதியை குருவாக போற்றும் இத்தமிழ் பற்றுடை பாவேந்தர் இலக்கணப் பிழையை பொறுக்க மாட்டாதவர். அச்சுக்கூடங்களில் பெரும்பகுதி இடத்தை பிடித்து பரவிக்கிடக்கும் தமிழ் எழுத்து பெட்டிகளையும், தமிழ் எழுத்துக்கள் கூடத்தில் படும்பாட்டையும் கண்டு மனம் நோவுற்று எழுத்து சிக்கனம் செய்தல் வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். உ' வும் 'ற' வும் சேர்ந்து 'ஹ' எனும் வடமொழி எழுத்துக்கு பதிலாக வருவது போன்று தமிழ் எழுத்துக்களை சேர்த்து எழுத்து சிக்கனம் செய்யலாம் என்று விளக்கினார், தனது எழுத்து சிக்கன ஆய்வினனை செயற்படுத்துவதினையும், இம்மாற்றத்தை ஏற்படுத்துவதினையும் தமிழுலகு அவ்வளவு சீக்கிரம் சீரணித்துக் கொள்ளாது என்ற எண்ணத்தையும் அவர் வெளிப்படுத்த தவறவில்லை. தமிழில் உயிர் எழுத்து 12 மெய்யெழுத்து 18 உயிரும் மெய்யும் புணர்ந்த உயிர்மெய் எழுத்துக்கள் 216 ஆகும். உயிரும், மெய்யும் இருக்கையில் உயிர் மெய் எழுத்து அவசியமில்லை, என்றவாறு தமிழ் எழுத்து சிக்கனத்திற்கு 31 (உயிர் எழுத்து 12, மெய் எழுத்து 13 ஆயுதம் 1) எழுத்துக்களும் போதுமானதாகும் என்றார். அவரின் எழுத்து சிக்கனம் பின்வருமாறு ; 'க' என்பது ஓர் எழுத்தல்ல அது க், அ சேருவதால் உருவாகும். பை என்பதும் அவ்வாறு எழுத்தல்ல அது 'ப் ஐ. சேர்ந்து உருவாகிறது. கண்ணன் என எழுத வேண்டுமானால் 'க்அண்ண்அன்'' என எழுதலாம் விசிறி என்பதை வ்இச்இற்இ என எழுதலாம். ''அஃது பெரிது ஆயினும் எளிது'' என்பதை ''அஃத்உ ப்எர்இத்உ ஆய்இன்உம் எள்இத்உ'' என எழுதலாம் ஈவது விலக்கேல் என்பதை இவ்அத்உவ்இல்அக்களால் என்றும் எழுதலாம், இக்கருத்துக்கள் தற்போது தமிழறிஞர்களால் பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டு வருகின்றன. காலவோட்டத்தில் இவரின் எண்ணங்களும் நிதர்சனமாகலாம் என்பதில் முரண்பாடில்லை,

தற்போது தமிழ் நெடுங்கணக்கில் சுமார் 13 எழுத்துக்கள் சீர்திருத்தமடைந்துள்ளன அவற்றின் பழைய வடிவங்களும் புது வடிவங்களும் பின்வருமாறு:-

| பழைய வடிவம் | ணா | றா | னா | ணை | லை | ளை | னை | ணொ | றொ | னொ | ணோ | றோ | னோ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புது வடிவம் | ணா | றா | னா | ணை | லை | ளை | னை | ணொ | றொ | னொ | ணோ | றோ | னோ |

இவ்வாறான தமிழ் வரிவடிவ மாற்றம் முற்றிலும் உயிர் மெய்யெழுத்துக்களில்தான் அமைந்திருக்கிறது என்பது வெளிப்படை, இத்தகைய எழுத்து வரிவடிவ மாற்றங்கள் தற்காலத்தில் தமிழறிஞர்களால் மேற்கொள்ளப்பட்ட மொழிப்புரட்சியின் படிக்கல்லாக அமைகின்றன. இத்தகைய மாற்றங்களைச்செய்வதன் மூலம் மொழியின் சிறப்பும், இலகு தன்மையும் துலங்கும் என்பதில் ஐயமில்லை.இத்தகைய மாற்றங்களை தமிழுலகுக்கு கொண்டு வருவதும் அதனை செயற்படுத்துவதும் இலகுவானதொன்றல்ல. அதாவது இத்தகைய எழுத்துச் சீராக்கம் 1967 இல் பிரேரிக்கப்பட்டபோதும் அவை செயலுருவில் வருவதற்கு 20 வருடங்கள் பிடித்தன. தமிழ் நாட்டில் கூட இதன் அறிமுகம் 10 வருடங்களின் பின்தான் ஏற்பட்டது என்னும்போது இலங்கை போன்ற எமது நாட்டில் இம்மாற்றங்களை நடைமுறைப்படுத்துவது இலகுவானதொன்றாய் இல்லை, ஆயினும் தற்போதைய அரசு மொழிக்கொள்கையில் திருப்தியான போக்கைக் கடைப்பிடிப்பதால் இலங்கையில் தமிழ் வடிவமாற்றம் செயலுருப்பெறுவதில் தடையிராது என்பதில் ஐயமில்லை. மேலும் தமிழ் மொழிக்கு என்றொரு அமைச்சு இருப்பதால் மொழியின் நலம் இன்னும் மேலோங்கும் என்பதில் நம்பிக்கை உண்டு. அதற்கு தமிழ் நெஞ்சங்கள் இவ்வமைச்சுக்கும் தமிழ்மொழிக்கும் என்றும் கடமைப்பட்டவர்களாவர்.

வாழ்க செந்தமிழ் வாழிய நீடூழி

## புலமைப் பரிசில் பரீட்சை

| ஆண்டு | சித்தியடைந்தோர் வீதம் ஆண்டு 6 | ஆண்டு 5 |
|---|---|---|
| 1985 | 30% | — |
| 1986 | 45 % | — |
| 1987 | 40 % | — |
| 1988 | 47 % | 30 % |
| 1989 | | 64 % |

மாவட்டத்திலே புள்ளிகள் அடிப்படையிலே முதலாவதாக வந்த மாணவர்கள்

| | | |
|---|---|---|
| 1986 | செல்வி ஏ. பத்மாவதி | (ஆண்டு 6) |
| 1987 | செல்வி எஸ். ஐரின் சியாமினி | (ஆண்டு 6) |
| 1988 | செல்வி எம். எம். சியாமா | (ஆண்டு 6) |
| 1989 | செல்வி வி. சர்மிளா | (ஆண்டு 5) |

# நமது பாடசாலை பரீட்சை பெறுபேறுகளின் புள்ளி விபரம்

## க. பொ த சாதாரணம்

| தொகை | தோற்றியோர் தொகை | சித்தியடைந்தோர் தொகை | க. பொ. த. (உயர் தர)க்கு தெரிவானோர் வர்த்தகம் | கணிதம் | உயிரியல் |
|---|---|---|---|---|---|
| 1984 | 86 | 26 | 11 | 3 | 5 |
| 1985 | 101 | 38 | 20 | 7 | 1 |
| 1986 | 124 | 46 | 28 | 12 | 6 |
| 1987 | 171 | 51 | 24 | 14 | 3 |
| 1988பழைய பாடத் திட்டம் | 44 | 15 | 8 | 4 | 2 |
| 1988 புதிய பாடத் திட்டம் | 131 | 22 | 13 | 2 | — |

## க. பொ. த. உயர்தரம்

| ஆண்டு | தோற்றியோர் தொகை விஞ். | வர். | சித்தியடைந்தோர் தொகை விஞ். | வர். | ப/கழக தெரிவானோர் விஞ். | வர். |
|---|---|---|---|---|---|---|
| 1984 | — | 12 | — | 4 | — | 1 |
| 1985 | — | 12 | - | 7 | — | 1 |
| 1986 | 9 | 20 | 1 | 7 | — | 1 |
| 1987 | 3 | 22 | 1 | 7 | 1 | 4 |
| 1988 | 5 | 25 | 1 | 13 | — | 3 |

# தமிழச்சி

இலங்கை மலைதனிலே— தமிழச்சி
என்ன துயரமெல்லாம் காணுகின்றாயடி

முழங்கை வலித்திடவே தேயிலை
முளைகள் பறித்து முகம் சிவப்பாயம்மா

விலங்கும் உறங்கும் சாமத்தில்
விழித்து நெடுமலை ஏறி இறங்குவாய் !

பழங்கள் பழுதிடாதோ உன் காலில்?
பச்சை குருதி நீர் பாயாதோ கண்மணி

காலைப் பனி நனைவாய் ! என்னம்மா
காய்ந்து நடுவெயில் தனிலே கருகுவாய்

பாலை நினைந்தழுவான் உன் பிள்ளை
பாவி வெறும் முலை நினைந் தழுவாயடி

ஏழை அடிமையடி தமிழச்சி
இங்கோர் தமிழுடல் ஏனெடுத்தாயம்மா?

ஊழை நினைந்தழவோ? தமிழனின்
உரிமை இலாநிலை எண்ணி அழவோடி

கா. சிவானந்தன்

# அன்னையைப்போல் ஒரு தெய்வம்

பொழுது புலர்கின்றது புள்ளினங்கள் கீச்சிடுகின்றன சிவப்பு உருண்டையாய் சூரியன் உலகை வேவுபார்க்க வருகின்றான் சலசல வென்று பாயும் நீரோடை இனிமையான மனவுணர்ச்சியை ஏற்படுத்துகின்றது. ஆனால் அந்த மலைவாழ் மாந்தர்கள் அவர்களின் மனங்கள் ஏனோ அவ்வழகிய காட்சியில் லயிக்க மறுக்கின்றன. அவர் தம் இதய ஏக்கங்கள், நிறைவேறாத ஆசைகள் இவையெல்லாம் உணர்ச்சிகளை மரத்துப்போக செய்துவிட்டன இது ஒரு தொடர் கதையா?

வாழ்க்கையின் சலிப்பு என்ற எல்லைக்கே போய்விட்ட மருதம் மட்டும் விதிவிலக்கா என்ன? தன் வாழ்வில் மட்டும் ஏன் இத்தனை கஷ்டங்கள் இத்தனை போராட்டங்கள் என்றெண்ணி கண்ணீர் வடித்த நாட்கள் அனேகம் அத்தனையையும் தன் பொறுமையின் மூலம் சகித்து தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டாள்

தினம் தினம் குடித்து விட்டு வந்து தன் உடம்பைப் பதம் பார்க்கும் குடிகாரக் கணவன் இராமநாதன் திருமண வயதை எய்தியும் கல்விக் கடலில் சென்று கொண்டிருக்கும் மகள் பவ்யா

பாவம் மருதம் காலையில் ஐந்து மணிக்கு எழும்பியவள் இரவு வாங்கிய அடியில் மேலெல்லாம் இலேசாக வலிப்பமதை உணர்ந்தாள் எப்படியிருந்தாலும் தன் உழைப்பை மட்டும் நம்பியிருக்கும் தன் குடும்பத்தை அவள்தானே காப்பாற்ற வேண்டும் எல்லாவற்றையும் விட தன் மகளை நன்றாகப் படிக்க வைத்து அவ்ளை ஒரு நல்லவன் கையில் பிடித்துக் கொடுக்க வேண்டும் என்பதே அவளின் அந்தரங்க ஆசை தன் மகளை நினைத்து அரைவயிற்று சாப்பாட்டுடன் அந்த மலைப்படிகளில் ஏறி தன் உடம்பை இயந்திரமாக இயக்குகிறாள் மருதம். உழைத்து உரமேறிய உடல் பம்பரமாய்ச் சுழல்கின்றது.

வழமை போல் அன்றும் வேலைக்குச் செல்லுமுன் முதல்நாள் அடுத்த வீட்டில் கடனாக வாங்கிய இரண்டு சுண்டு மாவைப் பிசைந்து பவ்யாவிற்கு சாப்பாடு செய்து கொடுத்து அவளை பாடசாலைக்கு அனுப்பினாள் பின் இருப்பதில் கொஞ்சத்தைத் தான் சாப்பிட்டுவிட்டு மிகுதியைத் தன் கணவனுக்கு வைத்து விட்டு வேலைக்கு செல்ல ஆயத்தமானாள் அப்போது இராமநாதன் படுக்கையில் இருந்தவாறு முனகிக் கொண்டிருந்தார் திரும்பிப் பார்த்தவள் சட்டென்று முகத்தை வேறுபக்கமாக் திருப்பிக் கொண்டு வீதியில் நடக்க ஆரம்பித்தாள் ''முருகா எனக்கு ஏன் இத்தனை சோதனை எனக்கு நல்ல காலமே பிறக்காதா? இவரைத் திருத்தவே முடியாதா? .. ச் சீ .. என் குடும்பத்தை இந்த ஊரே ஒதுக்குகின்றாற் போல் குடிகாரன் குடும்பம் என பட்டம் சூட்டிவிட்டதே'' என்று மனதிற்குள் நொந்தவாறே நடந்தாள் மருதம் படிக்காத பெண்ணாக இருந்தாலும் தன்னை எவ்வாறு வழிப்படுத்துவது என்று நன்கு உணர்ந்தவள் இந்த ஊரே வியக்கும்படியாக தன் மகளை ஒரு நல்லவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அந்த புனிதத்தாயின் மனம் ஒவ்வொரு வினாடியும் துடித்தது அதற்காகத் தன் உதிரததையே பணயம் வைத்தது.

அன்று வழமையைவிட பவ்யா சிறிது நேரம் சென்று வீடு வந்தாள் அவள வருமவரை அவளையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் பவ்யாவைக் கண்டதும் அந்தத் தாயின் மனம் பூரிப்பில் ஆழ்ந்தது ''பவ்யா ஏனம்மா இவ்வளவு நேரம் உன்னைக் காணாமல் என் மனம் என்ன பாடுபட்டிச்சி தெரியுமா?''

''இல்லம்மா எனக்கு இன்றைக்கு வகுப்பு ஒன்று இருந்தது அதுதான் இவ்வளவு நேரம்'' என்றாள் மகள் ஆமாம் அந்தத் தாய்க்கு என்னதான் விளங்கும் இவள் சொல்வதைக் கேட்டுவிட்டு ''வாம்மா இவ்வளவு நேரம் சாப்பிடாம இருக்கிறியே பசிக்கும் கையைக் கழுவிவிட்டு வா சாப்பிடலாம்'' என்று கூறி அடுப்பங்கரைப் போனாள் அன்று அவளுக்காகவே அந்த ஊரிலுள்ள கடையில் கெஞ்சிக் கிளறி ஒரு கிலோ அரிசி வாங்கி வந்து பகல் உணவைச் சமாளித்தாள் பவ்யா சாப்பிட்டுவிட்டு ''அம்மா நீ சாப்பிட்டியா?'' என்று கேட்டாள் மருதமோ ''இல்லையம்மா நீ சாப்பிட்டால் எனக்கு பசியெல்லாம் தீர்ந்த மாதிரி'' தாயும மகளும் உரையாடிக் கொண்டிருப்பதை கேட்டுக் கொண்டே இருமினார் தந்தை

கடைக்காரன் வந்து ''அம்மா போன மாதமும் சம்பளம் போட்டு ஒரு சதமும் கொடுக்க வில்லை இந்த மாதமும் கொடுக்கவில்லை இனி கடனை அடைக்காமல் கடைப் பக்கமே வர வேண்டாம்'' என்று தாறுமாறாக கத்திவிட்டு செல்லும் பொழுது மருதம் கல்லாக உட் கார்ந்திருந்தாள்.

அடுத்த நாளும் மகளை வெகுநேரம் காணாது மருதம் தேடிக் கொண்டு புறப்பட்டாள் நெஞ்சில் ஒரு இனம் புரியாத படபடப்புடன் விரைந்து சென்றாள் கடவுளே என்மகளுக்கு ஒன்றுமே வரக்கூடாது என்று மனமார வேண்டிக் கொண்டே சென்றாள் இடையில் யாரோ சிரித்துப் பேசிக் கொண்டிருப்பது கேட்டது இருள் உலகைக் கவ்விக்கொண்டிருந்த நேரம் இன்னும் சிறிது நேரம் சென்றால் நன்றாக இருட்டி விடும் அவள் கையில் ஒரு வெளிச்சமும் இல்லை ஒரு மரத்தடியில் ஒரு ஆணும், பெண்ணும் சிரித்து மகிழ்வதை கண்டாள் அவர்களிட மாவது கேட்கலாம் என நினைத்து விரைவாக நடந்து அவர்களை நெருங்கினாள்.

நெருங்க மருதத்தின் இதயத்துடிப்பு அதிகமாகியது பவ்யா மாதிரித் தெரிகிறதே இல்லை உன்மகளாக இருக்கக் கூடாது கடவுளே அருகில் வந்தவள் அதிர்ந்து போனாள் பவ்யா என்று கத்த வேண்டும் போலிருந்தது எந்தத் தாயால் பேச முடியும்? தாயைக் கண்ட பவ்யா நடுங்கி னாள் அழுதாள் மன்னிப்புக் கேட்டுக் கதறினாள் புலம்பினாள் ஆனால் அவையெல்லாம் மரு தத்தின் செவிகளுக்கு நுழைந்ததோ தெரியாது அந்த தாயெனும் தெய்வம் கல்லாக் சமைந்து விட்டது பவ்யா கதறினாள் அம்மா எனக்கா நீ பட்டினியாகக் கிடந்தாயே இனி யாரை நான் அம்மா என்றழைப்பேன் ''அம்மா நான் என்ன செய்வேன்?'' கைகளால் தன்தலையிலே அடித்துக்கொண்டாள் பக்கத்திலிருந்த வாலிபன் பிரமை பிடித்தவன் போல் நின்றான் ஆனால் பவ்யா தன் அழுகையை நிறுத்தவில்லை அழுதாள் அழுது கொண்டே இருந்தாள்.

கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதற்கு மருதத்தின் இதயத்தில் விழுந்த இடியால் அவள் என்றுமே எழும்பப் போவதில்லை உறவினர்கள் எத்தனையோ பேர் உலகில் இருந்தாலும் தாயைப் போன்ற சொந்தம் மீள வருமா?

**செல்வி எம். பத்மா**

★

# உங்களுக்குத் தெரியுமா?

| | | | |
|---|---|---|---|
| முத்தமிழ் — | இயற்தமிழ், | இசைத்தமிழ் | நாடகத்தமிழ் |
| முக்குணம் — | இராசதம், | சாத்வீகம் | தாமதம் |
| முக்குற்றம் — | காமம், | வெகுளி | மயக்கம் |
| முச்சுடர் — | சூரியன். | சந்திரன் | அக்கினி |
| முப்பொருள் — | பதி, | பசு | பாசம் |
| முக்கனி — | மா | பலா | வாழை |
| மூவேந்தர் | சேரன், | சோழன் | பாண்டியன் |
| மும்முரசு — | வீரமுரசு, | கொடைமுரசு | மங்கலமுரசு |

தொகுப்பு
டி. அஞ்சலா தேவி
ஆண்டு 11

தமிழ்விழா சிறப்படைய எங்கள்

**வாழ்த்துக்கள்**

கண்கள் பஞ்சடைந்து போகிறது. கால்கள் நடக்க மறுக்கின்றன.
ஆனால் தமிழ்ப்பற்று இன்னும் என்னோடிருக்கிறது.
—தனிநாயகம் அடிகள்

# கிருஷ்ணா டெக்ஸ்டைல்ஸ்

**35, பிரதான வீதி**

**பண்டாரவளை.** தொலைபேசி : 057-2573

# ஏற்றமிகு மலையகமே இன்னுமா தூங்குகின்றாய்?

*ஏற்றமிகு மலையகமே!*
*என்னருமைத் தாயகமே! - நீ*
*தரைத் தோற்றத்தில் உயர்ந்ததைப் போல்*
*தரத்தில் ஏன் உயரவில்லை?*

★

*காட்டை அழித்து நாட்டை உருவாக்கிய*
*நம்மவர் கூட்டத்தினர் - மாற்றம்*
*ஏதுமின்றி வாட்டத்துடனே*
*வாழ்கின்றார் இன்றும்.*

★

*தேயிலை நட்டு - அதனால்*
*நம்நாட்டு நாணய மாற்றைத் தேடித்தரும்*
*எம்மவர் கூட்டத்தை கவ்வாத்து வெட்டியதனாலா?*
*கவலையுடன் தூங்குகின்றாய்?*

★

*வெட்டினால் சாய்ந்துவிடும் தென்னையில்லை,*
*நாங்கள் வெட்டவெட்ட தளிர்த்துவரும் தேயிலைகள்!*
*வெட்டினாலும் வளர்வோம்.*
*பட்டதும் கெட்டதும் போதும்,*

★

*புறப்படு!, இன்று புதுயுகம் படைக்க!*
*கல்வியில், கலையில், விஞ்ஞானத்தில், பொருளாதாரத்தில்*
*ஏற்றம் பெற்றிடத்தான்!*
*ஏற்றமிகு மலையகமே,*

★

*எண்ணியது போதும்*
*இன்னுமா தூங்குகின்றாய்?*
*விழித்தெழு விரைவில்!*

**செல்வி சி. மீனாம்பிகா**

# மதிப்பார் யாருமில்லை

மலையேறித் தளிர்கொய்யும் மக்களாய்
தம் இதயச் சுமையெல்லாம் நீக்கிவிட்டு
தம் சமுதாயத்திற்கோர் விடிவுகிடைக்கவேண்டுமென
உழைக்கிறார்கள் தேயிலையைக் கதையாகக்கொண்ட
நம் மலையகத்தமிழர்.

★

தேயிலையின் கதையையே தம்கதையாக்கிக்கொண்ட
இவர்கள் ஏழைகளும் மண்மீது வாழவேண்டுமென்றுழைக்கும்
இவர்களை ஏறெடுப்பார் யாருமில்லை தம்கையே தனக்குதவி
என்றிருக்கும் இவர்கள் தமக்குமோர் நல்வாழ்வு கிடைக்குமென
ஏங்கித்தவமிருக்கிறார்கள்.

★

கூட்டழகு காளையரின் உள்ளமெல்லாம் சீதனமென்றிருக்கும்
இந்நாளில் தன்னையுமோர் தக்கமுதல்வன் சீதனமின்றி
கரைசேர்க்க மாட்டானா என்றேங்கும்
இத்தேயிலைப் பெண்களுக்கென்றோர்
விடிவுகிடைக்காதோ!

★

நாட்டின் அபிவிருத்தியே இவர்கள் கையிலிருந்தும்
இத்தேயிலை மக்களை மதிப்பார் யாருமில்லை
தம்வாழ்வை தளிர்கொய்யவென்றே அர்ப்பணித்த
இவர்களுக்கென்றோர் நல்வாழ்வை
கொடுத்துதவாயோ சமுதாயமே!

★

தம்இதயச்சுமையெல்லாம் நீக்கிவிட்டு தேயிலையின்
கதையையே தம்கதையாய் எண்ணி தமக்குமோர்
நன்னாள் பிறக்குமென எதிர்பார்த்து ஏக்கப்
பெருமூச்சுவிடும் மலையக மக்களுக்கோர்
விடிவு கிடைக்காதோ!

செல்வி கே. தேவகுஞ்சரி

# தேயிலையின் கதை

மலையகத்தின் வனப்பிற்கே காரணமாய் இருந்து
ஏழைகளின் வாழ்விற்கு உதவியாய் இருந்து
கவிஞனின் கற்பனைக்கு களஞ்சியமாய் இருந்து
மேன்மை இடம் பெற்று விட்ட தேயிலையே!

★

நாட்டில் நடக்கும் கொடுமைகளைக் கண்டும் காணாதது போல் வளர்ந்து,
மலையகத்தின் வறுமையை எண்ணி பன் மடங்காய் கிளைவிட்டு வளர்ந்து,
நாட்டின் வளர்ச்சிக்காக நாளும் துளிர் விட்டு வளர்ந்து,
செழிப்பாய் வளர்ந்து விட்ட தேயிலையே!

★

நாட்டின் பொருளாதாரத்திலே முதுகெலும்பாய் நின்று.
ஏழை எங்கள் வாழ்விலே விடிவெள்ளியாய் நின்று.
மலையகத்தின் சிறப்பிற்கே காரணமாய் நின்று
நாளும் உழைத்து விட்ட தேயிலையே

★

இறந்த பின்னர் கூட விறகாய் உதவி,
வரண்ட எங்கள் வாய்க்கு பானமாய் உதவி,
தனக்குத் தானே பசளையாய் உதவி,
வாழ்க்கையை அர்ப்பணித்த தேயிலையே!

★

வேலையில்லா மக்களுக்கு வேலை தந்து,
உணவில்லா மக்களுக்கு உணவு தந்து,
உடையில்லா மக்களுக்கு உடை தந்து,
தெய்வ இடம் பெற்றுவிட்ட தேயிலையே!

★

வறுமை என்ற கோட்டினுள் வாழ்ந்த நாங்கள்,
வளர்ச்சி இல்லா மக்களாக வாழ்ந்த நாங்கள்,
